உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

வால்யூம் 4 } 1905 ௵ ஆகஸ்டுமீ { புஸ்தகம் 8.

## வித்தை. XIII.

(முன் தொடர்ச்சி)

சென்ற சஞ்சிகையில் தொழிற் பாடசாலைகளைப்பற்றிக் கூறினோம். இப்பத்திரிகையில் சர்வகலாசாலைக் கல்வியைப் பற்றிக் கூறுவோம். இதில் எப். ஏ, பீ. ஏ, எம். ஏ, சட்ட பரீக்ஷைகளும் வைத்தியப் பரீக்ஷைகளும் இன்னும் சில பரீக்ஷைகளும் அடங்கும். எப். ஏ. பரீக்ஷையை முதலில் எடுத்துக்கொள்வோம். இங்குத்தான் கலைகள் முதல் முதல் உண்மையான போதனைகளை யடைகின்றன. தக்க புத்திமான்கள் மட்டும் இதிற் கல்வி பயில வேண்டியிருக்கச் சகலரும் கல்வி கற்க ஆரம்பிக்கிறார்கள். அதனால் எல்லோரும் சரியான தேர்ச்சியடைய இடம் பெறுகிறதில்லை. முற்காலத்தில் இவ் வகுப்பு மாணாக்கர் தாமே யுழைத்துச் சகல விஷயங்களையும் அறிவார்கள். தற்காலம் இவர்களது கல்வி ஆழத்தில் அதிகமின்றிப் பரப்பு விசாலத்தில் அதிகமாக இருக்கிறது. மெட்ரிக்குலேஷனுக்கும் எப்-ஏக்கும் ஏற்பட்டிருக்கிற தாரதம்மியத்தைக் காட்டிலும் எப்·ஏக்கும் பீஏக்கும் ஏற்பட்டிருக்கிற தாரதம்மியம் அதிகமாகவே இருக்கிறது. எப். ஏ, பரீக்ஷையில் சில அநாவசியமான விஷயங்களை எல்லோருக்கும் ஒன்றுபோலப் போதித்து வருவது சரியன்று என்பது நம் அபிப்பிராயம். கணக்கு விஷயம் கட்டாய பாடமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கணக்கு யுக்தி புத்தியை நன்கு விருத்தி பண்ணக்கூடியது என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. ஆனால் உலக வியாபாரத்துக்கு மெட்ரிகுலேஷனில் சொல்லிக்கொடுக்கும் கணக்கே போதுமானது. என்ஜினியர் பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளுக்குத் திரிகோண

மிதி முதலிய படிப்புக்கள் மிக்க அவசியமாயினும் அவற்றை அன்னவர்களுக்கே ஏற்படுத்தாமல் எல்லோருக்கும் கட்டாய பாடமாக ஏற்படுத்தியிருத்தல் சரியானதாகத்தோற்றவில்லை. அதை முற்றிலும் ஒழிக்காமல் இஷ்ட பாடமாக வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தல் நலமாயிருக்கும்.

பூதபௌதிகசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், முதலியவைகளை மெட்ரிகுலேஷனில் சிறிதுகற்பிக்கிறார்கள். எப். ஏ, இல் அவைகளை முற்றிலும் ஒழித்துப்பின் பீ. ஏ, இல் தொடங்குகிறார்கள். ஏன் எப். ஏ, இலும் தொடர்ச்சியாகக்கற்பித்தல் கூடாது? அவ்விஷயங்களில் ருசியுள்ள மாணாக்கர்களுக்கு அவ்விதருசி இரண்டுவருஷம் தடைப்பட்டுப்போகிறது. உடற்கூற்றுச்சாஸ்திரம் எவருக்கும் தெரியவேண்டியது அவசியந்தான். ஆனால் அதனைப்புத்தகரூபமாக அதிகம் கற்பிக்கச்செய்யாமல் பதுமைகள் ரூபமாகவும் சித்திரங்கள் ரூபமாகவும் அதிகம் கற்பிக்கச் செய்து அறிவைப் புகட்டல் வேண்டும். விநோதக்காட்சிக்கண்ணாடி மூலமாகக்கற்பித்தல் இன்னும் விசேஷமாகும். வரவரச்சாஸ்திரப்பயிற்சி அதிகமாகின்றது. அதற்கேற்ப இப்போதனை முறைகளையும் இம்மாதிரி கருவிகளைக்கொண்டே புகட்டல்வேண்டும். சரித்திரம்தெரியவேண்டுவது இன்றியமையாதது. நமக்கு இச்சாஸ்திரபாடங்களைப் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்திருக்கிறவண்ணம் எப். ஏ. யிலும் அவ்வாறேசெய்து இவ்விருபரீக்ஷைப்பாடங்களையும் சரிவரப்படித்துக் கொடுக்கும் பக்ஷத்தில் மாணாக்கர்களுக்கும் நல்லஅறிவு உண்டாகும்; சிரமமும் இராது. பலவிஷயங்களிற் புத்தியைச் செலுத்திக் கிலேசப்படுத்தவுமிடமிராது. பீ. ஏ. இல் உள்ளதுபோல் இரண்டு பாஷைகளிலும் ஏதாவது ஒரு சாஸ்திரத்திலும் தக்கதேர்ச்சி ஏற்பட்டால் போதும். அவ்வாறு எப். ஏ. இல் ஏற்படுத்தினல் பீ. ஏ. இலும் அதே சாஸ்திரங்கள் நன்கு பயிற்சி செய்யப்படும். தற்காலம் இருப்பதைக் காட்டிலும் மாணாக்கர் அந்தந்தச்சாஸ்திரத்தில் விசேஷ தேர்ச்சியடைவார்கள் என்பதிற்றடையில்லை. பாஷாவிஷயங்களிலும் இக்காலம் எப். ஏ. க்களுக்கு இருப்பதினும் அதிகதேர்ச்சி யுண்டாகும். இவ்வாறு செய்யாமல் எவ்வளவு புத்திகூர்மையை உண்

டாக்கினாலும் பின் ஒருவன் ஜீவதசையில் ஒருநாளும் பயன்படாத விஷயங்களை அவனுக்குக் கட்டாயப்படுத்திப் போதிப்பதால் அவன் புத்திக்குக் கிலேசத்தை யுண்டுபண்ணுகிறதைவிட வேறொன்று மில்லை. திரிகோணமிதி மகா உத்கிருஷ்டமான கிரந்தமானாலும் அதை நூற்றுக்குத்தொண்ணூற்றொன்பது பேர்வரை ஒருநாளும் பயன் படுத்துகிறதில்லை. நிலஅளவுக்கு வேண்டியிருக்கலாம். அதன் வாய்பாடுகளைமட்டும் தற்காலம் கிராமக்கணக்கர்களுக்குக் கற்பிக்கும் விதம் கற்பித்தால் போதாதா? இன்னுமிவைபோன்ற விஷயங்களாகிய க்ஷேத்திரக்கணிதம், பீஜ கணிதம் முதலியவைகள் ருசியுடன்கற்றுக்கொள்ளுகிற சிலருக்கே ஏற்றனவாகும். எல்லோருக்கும் ஏற்றவையாகா. உடற்கூற்றுச் சாஸ்திரமும் சரித்திரங்களும் அவ்வாறாகா. ஆகையால் இவ்விஷயங்களில் பீ. ஏ முறையை அனுசரித்தலே நலமாகும். பீ. ஏ இல் மாணாக்கர்தற்காலம் கஷ்டப்படும் விதம் கஷடப்படவேண்டியதில்லை பீ. ஏ. இல் நாம் குறை கூறுவதற்கு யாதொரு இடமுமில்லை. ஆனால் ஒருகுறைமட்டுங் கூறுவோம். சிற்சில கலாசாலைகளில் தக்க போதகாசிரியர்கள் இல்லை. முக்கியமாய் பீ. ஏ. வகுப்புக்களுக்குப் பாடம் சொல்லுகிறவர்கள் தக்க அனுபவமுள்ளவர்களாகவும் நெடுநாள் அக்கல்வி விஷயத்தில் பாடுபட்டவர்களாகவு மிருத்தல்வேண்டும். அவ்வாறு செய்யாமல் சமீபகாலத்தில் பரீக்ஷையிற் றேறின சிறுவர்களைப் பெரிய புரொபெஸர்களாகச் செய்துவிடுகிறார்கள். அவர்கள் கெட்டிக்காரர்களா யிருந்தபோதிலும் அநுபவமுதிர்ச்சி யில்லாதவர்களாதலால் பாடஞ்சொல்லக் கஷ்டப்படுகிறார்கள். இது நிற்க. எல்லாப்பாடங்களிலும் ஒருவருக்குத் திறமையுண்டு என்று எண்ணி அவரை இன்றைக்கு ஒருபாடத்துக்கும் நாளைக்கு ஒருபாடத்துக்கும் தூக்கிப்போடுகிற வழக்கம் இருக்கின்றது. அவ்வாறான ஏற்பாடுகளால் மாணாக்கர்களுககுத் தேர்ச்சிக்குறைவு உண்டாகிறது. பீ. ஏ. வகுப்புக்களுக்குப் பாடம் சொல்லுகிறவர்கள் உலகம் ஒப்பின. பிரஸித்திபெற்றவர்களாகவும் அநுபவமுதிர்ச்சியுள்ளவர்களாகவும் இருத்தல்வேண்டும். அப்படிப்பட்ட காலேஜ்கள் மூன்று நான்கு இருந்தாலும் போதும். அதுவிஷயத்தில் முற்காலம் சர்வசிலாக்கியமெனத் தோற்றுகிறது. சுயபாஷாவிஷயத்தில் அநேகம் உயர்ந்த கலா

சாலைகள் சரிவர இல்லையென்பதே நம்துணிபு. ஐரோப்பியசிலாசாலையிலிருந்து நேற்றுப்படித்தவர்களை இன்று நம்உயர்தரக் கலாசாலைகளுக்குப் பெரிய புரோபெஸர்களாக நியமனம் செய்துவிடுகிறார்கள். அதனால் அவஸ்தைப்படுபவர் நம் மக்களே. இராசாங்கபாடசாலைகளிலும் இவ்விஷயம் நடவாமற்போகவில்லை. ஜனங்களுக்கு இதுவிஷயத்தில் பேசவாயில்லை.

வைத்தியகலாசாலை விஷயமாய் ஒன்று கூறுவோம். ஆங்கில வைத்தியத்தையே முற்றிலும் போதிப்பதை நிறுத்தி நன்மைபயக்கத்தக்க நம் நாட்டுவைத்திய முறைகளையும் கற்பித்தல் நலமாகும். ஆங்கிலேய வைத்தியத்தில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை வரவர மட்டுப்பட்டுக்கொண்டு வருகிறது. நம்நாட்டு வைத்திய கிரந்தங்கள் தலையெடுக்கத் தொடங்கியிருக்கின்றன. அவைகளில் ஜனங்களுக்குமிகவும் பிரியமிருப்பதால் ஜனக்ஷேமார்த்தமாக அம்முறைகளையும்கற்பித்தல் மிக்கநன்மைபயக்கும். அநேகநாட்டுவைத்தியர்கள்இப்பொழுது ஜனங்களுக்குள்நடமாடி வருகிறார்கள். அவர்கள் ஏழைஜனங்களுக்கு அனுகூலம் செய்துவருகிறார்களென்றே சொல்லவேண்டும். அவர்களையும் நாட்டுமுறையில் அவ்வவ்வூர்களில் ஒருவருஷமோ இரண்டு வருஷங்களோ மூன்றுவருஷங்களோ வைத்துக்கற்பித்துவந்தால் நம் முறையும் ஆங்கிலமுறையும்ஒத்துப் பெருத்த நன்மை செய்ய முடியும். தற்காலம் அது விஷயத்தை அசட்டை செய்வதால் பலர் அனுகூலம் செய்வதற்குப்பதிலாக கேட்டை விளைவித்து வருகிறார்கள். சுதேச ராஜாங்கங்களாயினும் இம்முறையைக் கைக்கொள்ளலாமே. கிருஷி சம்பந்தமான கலாசாலையில் பலவிஷயங்களைப் புகட்டுகிறார்கள். இவ்விஷயங்கள் ஆங்கிலத்தில் இல்லாமல் சுயபாஷையில் கற்பிக்கப்பட்டால் பல குடித்தனக்காரர்கள் தங்கள் மக்களை அக்கலாசாலைக்கு அனுப்பச் சித்தமாயிருப்பார்கள். என்ஜினீரிங் காலேஜில் செய்யும் விதம் உயர்தரப்படிப்பு தாழ்ந்ததரப்படிப்பு இரண்டுமிருத்தல் நலம். ஆறுமாதகாலம் கிருஷி சம்பந்தமான முக்கிய விஷயங்களைச் சுயபாஷையில் நிதர்சனமூலமாகக் கற்பிப்பார்களாகில் ஜில்லா ஜில்லாவாய்ப் பலர் கிருஷிவிஷயத்தைக்கற்க முயல்வார்கள். நிபுணர்கள் உண்டாகும்படி சிலரைத்தேற்றினால் போ

தும். பலரைச் சாமான்னிய விஷயங்கள் அறியும்படி செய்தால் நலமாயிருக்கும். ஒவ்வொரு ரிவினியூ உத்தியோகஸ்தருக்கும் ஸோதம் பயிற்சி செய்வித்தால் மிக்க நலமாயிருக்கும். இவர்கள் அடிக்கடி கிராமங்களுக்குப் போக்குவரத்தா யிருப்பதால் கிருஷி சம்பந்தமான தங்கள் அறிவைக் குடிகளுக்குள் சுலபமாய்ப் பரவச் செய்வார்கள் தற்காலம் எல்லா ரிவினியூ இன்ஸ்பெக்டர்களையும் சர்வேயில் பழக்கவில்லையா? அதனால் எள்வளவோ அனுகூலமுண்டாகவில்லையா? அம்மாதிரியான சர்வே பள்ளிக்கூடங்கள் ஊரூராய்ச் செல்லுங்காலத்தில் ஜனங்கள் அவ்வறிவையடையவில்லையா? ஏன் அவ்வாறு ஒவ்வொரு ஜில்லா போர்டாரும் அவ்வாறான கலாசாலைகளை ஏற்படுத்திச் சொற்பகாலமாவது குடியானவர்களுக்கு அனுகூலம்செய்தல் கூடாது. இது முக்கியமாய் கவரன்மெண்டாருடைய கடமையாகும். சர்வகலாசாலையில் இதற்கென்று ஒரு பட்டப்பெயர் கொடுத்தலும் நன்மைபயக்கக்கூடும். ஆகையால் இவ்விஷயங்களைக் கவரன்மெண்டாரும் சர்வகலாசாலையாரும் ஒத்து உழைத்து நாட்டுக்குள்ள நன்மையைத்தேடவேண்டும். வைத்தியமும் கிருஷியும் சுயபாஷையிலேயே அதிகமாகக்கற்பித்துவந்தால் ஜனோபகாரமாயிருக்கும். தாழ்ந்தபடிப்புச் சுயபாஷையிலும் உயர்தரப்படிப்பு மட்டும் ஆங்கிலத்திலுமிருந்தால் போதுமானது. நம் இராஜதானியில் சர்வகலாசாலைச்சங்கத்தார்கள் தற்கால கலாசாலைகளைப் பரிசோதித்து அபிவிருத்திபண்ணவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கம்மிஷன் நியமனம் செய்து அக்கம்மிஷனும் ஊரூராய் வேலைசெய்துவருவதைப்பலரும் அறிவார்கள். அதில் ஆறு நிபுணர்கள் ஏற்பட்டிருப்பதால் கலாசாலை விஷயமாய் ஏதாவது சில சீர்திருத்தங்கள் உண்டாகலாம். சர்வகலாசாலைக் கல்விஜனக்ஷேமத்தைப்பொறுத்ததாகவுமிருத்தல் இன்றியமையாதது. எப். ஏ. பரீக்ஷை விஷயமாய்ச் சொன்ன சீர்திருத்தங்களைச் செய்வதுடன் வைத்தியம் கிருஷி விஷயங்களிலும் நாம் சொன்னதை அனுசரித்துச் சுயபாஷையிலேயே அவற்றிற்குரிய ஞானத்தை உண்டுபண்ணினுல் நம் நாடு பெருத்த க்ஷேமத்தை அடையும் என்பதிற்றடையில்லை "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்ற முதுமொழியை எவரும் சீர்தூக்கிப்பார்ப்பாராக.

பத்திராதிபர்.

# மனிதனும் அவன் உடல்களும்.

[முன் தொடர்ச்சி]

நாம் எடுத்துக்கொண்ட விஷயவிசாரணையிற் புகுமுன் ஆரம்பத்தில் தானே இந்நூல் வாசிப்பவர்களில் முக்கியமாய் மேனாடுகளில் பிறந்து வளர்ந்த ஒருவன் அவசியம் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. அதாவது அந்நாடுகளின் வழக்கங்களினாலும் ஆசாரங்களினாலும் அவன் தன்னைப்பொதுவாகக் கருதிவந்து பழக்கப்பட்டிருக்கின்றானே அந்த மனோபாவனையை விட்டு நீங்கி மனிதன் வேறு அம்மனிதன் வசிக்கும் உடல்கள் வேறு என்று பிரித்துத் தெளிவாக மனத்திற் கொள்ளல்வேண்டும். நாம் தரித்துக்கொண்டிருக்கும் நமக்குப்புறம்பான போர்வைகளை நாம் என்று துணிந்து நிச்சயிக்கும் துர்வழக்கம் அதாவது நமது உடல்களே நாம் என்று கருதும் துர்ச்சுபாவம் நம்மிடத்தில் அளவுக்குமிஞ்சிக் குடிகொண்டிருக்கின்றது. ஆதலால் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் உண்மையான கருத்தைக் கிரகிக்கவேண்டுமாயின் நாம் சாதாரணமாய்க்கொண்டிருக்கும் இவ்வபிப்பிராயத்தைவிட்டு நீக்கி நாம் சொற்பகாலம் தரித்துக்கொண்டிருந்து பிறகு கழித்துவிட்டும் மறுபடியும் அம்மாதிரிப் போர்வைகள் தேவையாருயிக்கும்பொழுது வேறு நூதனமானபோர்வைகளைத் தரித்துக் கொள்ளற்காகவே அப்படிக் கழித்து நாம் நீக்கும் போர்வைகளாகிய உடல்களை நாம் என்று நம்மை அவைகளுடன் ஒன்றுபடுத்தி எண்ணும் கருத்தை உடனே முற்றும் மறந்துவிடல் அவசியம். நாம் உடுத்தியிருக்கும் ஆடைகளுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கருதுதல் எவ்வளவு பேதைமையும் அவிவேகமும் பொருந்தியிருக்குமோ உண்மையாக அவ்வளவு பேதைமையும் அவிவேகமும் உள்ளது தோன்றி மறையும் இத்தேகங்களுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கருதுதலும். நமது இருப்பு இந்த உடல்களைச் சார்ந்ததன்று. உடல்களின் கணிசமும் சிரேயசும் அவைகள் நமக்குச் செய்யும் பிரயோசனத்தின் அளவேயாகும். விழித்துக்கொண்டிருக்கும்படியான ஜாக்கிராவஸ்தையிலும் கனவுகாணும் நித்திரையாகிய சொப்பனவஸ்தையில் கொஞ்சபரியந்தமும் அறிவாகிய

சைதன்னியமானது ஸ்தூல உடலில் தங்கி நின்றே தொழில் புரிகின்றது. சாமானிய மனிதர்களுக்கு இவ்விரண்டவஸ்தைகளிலுமுள்ள அறிவு அல்லது பிரஞ்ஞை ஸ்தூலதேகத்துடன் சம்பந்தப்பட்டே காணுகின்றதல்லால் அது தேகத்தைவிட்டு விலகிச்சொர்ச்சமாய் நிற்கும் அனுபவம் அவர்களுக்குக் கிடையாது. இக்காரணம் பற்றியே நமது அஹம் எனும் ஆன்மாவாகிய அறிவுடன் அந்த அறிவு தற்காலம் நின்று தொழில் புரியும் வாகனங்களாகிய உபாதிகளுடன் தினந்தினம் இடைவிடாது ஒன்றுபடுத்திக் கருதும் பெரும்பாகத்தைச் சற்று மன்னிக்கக்கூடும். ஆயினும் உண்மையான வர்த்தமானங்களை உள்ளவையுள்ளபடி மனத்தில் பரோக்ஷமாய்க் குறித்து அறிந்து அதன்மேல் நமது அஹம்எனும் ஆன்மாவானவன் அவனுடைய உபாதிகளாகிய தேகங்களுக்கு அதிபதியாம் என்று கருதிவர நாம் பழகிக்கொள்ளலாம். இப்படிச்செய்து வருவதால் சிலகாலத்திற்கப்பால் நாட் பழக்கத்தினால் இது நமக்கு மனக்குறிப்பாய் மாத்திரம் முதலில் இருந்ததுபோல் இல்லாமல் திட்டமாய் ஸ்பரிசிக்கக்கூடிய உண்மை உருவமாய் விடும். அப்பொழுது நமது அஹம் எனும் ஆன்மாவானவனை அவனுடைய தேகங்களினின்றும் வேறு பிரித்து நாம் உபாதியை விட்டுப் புறப்பட்டு வெளியேறிவந்து உபாதிக்குள்ளிருந்ததை விட அதற்கு வெளியிலிருக்கும் பொழுது நாம் அதிபூரண அறிவு பொருந்தியிருக்கின்றோம் என்றும் எவ்விதமாய்ப் பார்த்தபோதிலும் நாம் உபாதியின் இருப்பைப் பொறுத்து நிற்கிறவர்கள் அல்லவென்றும் அனுபவசித்தமாய்த் தெரிந்துகொள்ளப்பயிலுகின்றோம். ஒருதரம் இப்படிச்செய்து முடித்தமாத்திரத்தில் நமது அஹம் எனும் ஆன்மாவை நமது உடல்களுடன் அப்பால் ஒன்றுபடுத்தக்கருதுவது சகசமாகவே அசாத்தியமாய் விடுகின்றது. அப்பால் நாம் தரித்துக்கொண்டிருக்கும் உடல்களை நாம் என்று எண்ணும் பெரும்பிழையை மறுபடி ஒருக்காலுஞ்செய்யவேமாட்டோம். சகலருக்கும் இது சாத்தியமில்லாவிடினும் குறைந்தபக்ஷம் இவ்விஷயத்தைத்தெளிவாய் மனத்தில் பரோக்ஷமாய்க் குறித்துக்கொள்வது நம்மெல்லோருடைய சக்திக்குட்பட்டதே. ஆகையால் நாம் எல்லோரும் அஹம், நான், ஆன்மா, மனிதன், என்னும் பொருள் வேறு அவனுடைய உடல்கள் வேறு என்று எப்பொழுதும் இரவும் பக

லும் இடைவிடாது நோக்கும் வழக்கம் வரப்பழகலாம். இது செய்தலுமே பெரும்பான்மையாகிய ஜனங்களைக் கவிந்து போர்த்து மூடிக்கொண்டிருக்கும் மாயா மோகத்தினின்றும் விலகி வெளி கிளம்புவதாம். மேலும் இப்பழக்கம் நம்மை இந்த அற்பமாய வாழ்வின் விகாரங்களுக்கும் விக்கினங்களுக்கும் அப்பாற்பட்டு மேலுள்ள சஞ்சலமற்ற சாந்ததரமான மீதலத்தில் தூக்கிவைத்தும்; பிண்டத்திற்குள் வந்த அறிவுக்கு என்னவோ வெகு பிரமாதமாய்ப் பெருத்து விரிந்து தோன்றும் உலக வாழ்விற்கு இயற்கையான அற்பசங்கடங்களுக்கெல்லாம் நைந்து வாடாமலிருக்கும்படி செய்தும் சதா விகாரப்பட்டுக்கொண்டிருக்கும் அநித்திய வஸ்துவுக்கும் இதையடுத்து நித்தியமென்று சொல்லக்கூடிய வஸ்துவுக்கும் உள்ள உண்மையான தாரதம்மியத்தை நமக்கு விளக்கிக்காட்டியும், திக்குமுக்கடையும்படி அலைகளால் மோதி மோதி அடிக்கப்பட்டும் இங்கும் அங்கும் உந்தப்பட்டும் தத்தளித்துத் தயங்கி நின்று முழுகிப்போகக்கிடக்கும் மனிதனுக்கும் ஒரு கற்குன்றின் அடியில் அலைகள் தீங்கின்றி மோதியடித்துத் தெரித்துப்போகவும் அக்குன்றின்மேல் உறுதியாய்க் காலூன்றி நின்று பார்த்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கும் உள்ள பேதத்தை நாம் அனுபவமாய் உணரும்படி செய்தும், இவ்வாழ்வைப்பற்றியும் இவ்வுலகத்தைப் பற்றியும் நமக்கிருந்த எண்ணத்தையும் நடக்கையையும் முற்றிலும் மாற்றிவிடுகின்றது.

மனிதன் என்பதற்கு உயிரும் உணர்வும் பிரஞ்ஞையும் பகுத்தறிவுமுள்ள ஆன்மா அதாவது நித்தியமாகிய ஜீவன் என்றும், உடல்கள் என்பதற்கு இந்த ஆன்மாவானவனை உள்வைத்துச் சுற்றிக் கவசித்துக்கொண்டிருக்கும் பலவிதஉறைகள், கூடுகள், கோசங்கள், கஞ்சுகங்கள், கவசங்கள், என்றும் ஒவ்வொரு கோசமும் பிரமாண்டத்தில் உள்ளபலவிதபுவனங்களில் ஏதோ ஒரு குறித்த புவனத்தில் தொழில்நடத்த இந்த ஆன்மாவைத் தகுதியாக்குவதற்கான தென்றும் நான் பொருள்கொள்ளுகின்றேன். ஒருமனிதனானவன் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குச்செல்ல வேண்டுமானால் தரையில் வண்டியையும் ஜலத்தில் கப்பலையும் ஆகாயத்தில் வாயுக் கூண்டையும் உபயோகப்படுத்தியும் அவன் எல்லாவிடங்களிலும்

ஒருவனாகவே இருப்பதுபோலும் உண்மையான மனிதனாகிய ஆன்மாவானவன் எந்தத்தேகத்திலிருந்து தொழில்செய்த போதிலும் சரியே அந்த ஆன்மாவானவன் ஒருவனாகவேயிருக்கின்றான். வண்டி, கப்பல், வாயுக்கூண்டு என்னும் வாகனங்கள் ஒவ்வொன்றும் அது அது எந்தெந்தப் பூதத்தில் நின்று செல்லவேண்டியிருக்கின்றதோ அதற்குத்தகுந்தபடி அதன தன்சாமான்களும் இந்தச்சாமான்களை யடுக்கி அணிப்படுத்தும் ஒழுங்குகளும் வேறுபட்டிருப்பன போலவே ஒவ்வொருஉடலும் அது நின்று தொழில்செய்ய வேண்டியிருக்கின்ற அதன் சுற்றுவட்டகையின் சுபாவத்துக்குத்தகுந்தபடி வேறுபட்டிருக்கின்றது. ஒன்று மற்றொன்றைப்பார்க்கிலும் கனத்துத்திண்மையாயிருக்கின்றது, ஒன்று மற்றொன்றைவிடக் குறைந்த காலம் ஜீவித்திருப்பதாயிருக்கின்றது, ஒன்று மற்றொன்றைவிட குறைந்த சமர்த்துக்கள் உள்ளதாயிருக்கின்றது, இப்படியிருந்த போதிலும் இவ்வுடம்புகள் எல்லாம் பொதுவாய் இந்த ஒருகுணமுடையன. அஃதாவது மனிதனுடன் அவைகளைச்சம்பந்தித்து விவகரிக்கும் பொழுது அவைகள் அநித்தியமானவை - அற்பாயுசுள்ளவை - அவைகள் அவனுடையகருவிகள், ஆயுதங்கள் , அவனுடைய ஏவலாளிகள், தாசர்கள், தொண்டர்கள், பணிசெய்வோர் ; அவைகள் சுபாவப்படி நலிந்து தேய்ந்து போகக்கூடியவையும் அப்பால் புதுப்பிக்கக் கூடியவையுமானவை; அவனுடைய பலவிததேவைகளுக்கும் மேலும் மேலும் வளர்ந்துகொண்டேவரும் அவனது சக்திகளுக்கும் இசைந்தவண்ணம் இணங்குபவை. இனி நாம் இவ்வுடல்களை அடியில் தாழ்ந்ததினின்றும் ஆரம்பித்து ஒன்றின்பின்னொன்றாகக் கிரமமாய் ஏறிச்சென்று விசாரித்து அப்பால் இவ்வுடல்களிலெல்லாம் நின்று நடிப்பவனாகிய மனிதனையே கடைசியாக எடுத்துப்படிப்பாம்.

[இன்னும்வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

# மனிதனது எழுகூறு.

[முன்தொடர்ச்சி.]

இப்படியாக இஃதிருக்க, திரிமூர்த்திகளில் மூன்றாவதுமூர்த்தியென்றும், சப்தப்பிரமம் என்றும் சொல்லப்பட்ட **மகத்தினின்றும் உயர்தரமனஸ்** தோன்றினதானபடியால் அதாவது **உயர்தரமனஸ்** என்பது **இச்சாசக்தியின்** பிரசன்னமேயானபடியால் அந்த **உயர்தரமனஸ்ஸே** நமது எழுகூறுகளில் கீழ்நான்குகூறுகள் சேர்ந்தசதுஷ்கத்தைநோக்கச் சுயேச்சைக்கு இடமாயிருக்கின்றது. அதன் பிரேரணைகளுக்குக் கீழ்த்தர அகங்காரமாகிய சதுஷ்கம் சரியாக எதிரொலி செய்யக்கூடாமல் அசமந்தம் பொருந்தியிருப்பதினால் நமது கீழ்த்தரசுபாவத்தில் அந்த **உயர்தரமனஸ்** பூரணமாய்ப் பிரசன்னமாகாமல் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. காமக்குரோதாதிகளாலும் விருப்பு வெறுப்புக்களாலும் தேகசுபாவவேட்கைகளாலும் புறத்துள விஷயங்களினின்றும் வரும் தர்க்கங்களினாலும் பலவிதமாய்ச்சுழற்றியலைக்கப்பட்டாலும் **பேரறிவின்** கதிராய்ச்சாராம்சத்தில் **பேரறிவின்** சுபாவமேயாம் அதனுடன் ஒன்றாயிருப்பதுகொண்டு காமக்குரோதாதிகள் விருப்பு வெறுப்புக்கள் முதலிய கீழ்த்தர சுபாவங்களுக்கெல்லாம் மேல்நின்று அவைகளின் அதிபதியாய்ச்சாதித்து நிற்கவல்ல நமது சாதாரண அறிவு அல்லது இச்சையானது சதுஷ்கத்தில் முழுகியிருக்கும் அந்தக்காரணமாகிய **கீழ்த்தரமன**ஸில் தானே வசிக்கின்றது. இந்த அறிவு அதற்குக்கீழ்ப்பட்ட சகலதத்துவங்களையும நோக்கச் சுயாதீனமுள்ளது. அது நின்று தொழில்செய்யும்படியான பதார்த்தத்தின் அபக்குவத்தன்மையால் அதன் பூரணகோலம் எவ்வளவு விக்கினப்பட்டாலும் அது நான்காவது கூறாகிய **காமத்தின்** மீதும் மற்ற மூன்றுகீழ்க்கூறுகள் சேர்ந்த ஸ்தூல தேகத்தின்மீதும் தாக்கித்தொழில் நடத்தச் சுயாதீனமுள்ளது. இந்த அறிவு தனியாய் ஸ்தூலதேகத்தினின்றும் பிறந்ததோற்றமேயல்லாமல் வேறல்லவெனினும் காமாதிகள் விருப்பங்கள் இவைகளினின்றும் உதித்தகாட்சியேயன்றி வேறல்லவெனினும், ஊகித்தறிந்து விசாரிக்கவும், காமக்குரோதாதிகளின் சேஷ்டைகளையடக்கியாளவும், அனுகூலமானதை இச்சிக்கவும் பிரதிகூலமானதை வெறுத்துத்தள்ளவும் சகல விக்கினங்களையும் வென்று வீரக்கொடி கட்டித் துலங்கவும் சக்திவாய்ந்துள்ள "**நான்**" "**அஹம்**" என்னும் உணர்ச்சி எங்கிருந்து அதற்குண்டாகக்கூடும்? உண்மையில் அது உயர்தர தலத்தினின்றுதான் வேலைசெய்கின்றது. தன்பிறப்புச் சுதந்தரத்திற்குள்ள அரசுரிமையைத்தான் வகித்து நிற்கவேண்டுமென்னும் பொழுதெல்லாம் அது

கீழ்த்தரதத்துவங்களை நோக்க அவைகளுக்கு இராஜனே. தன் அதிகாரத்தைச்சாதித்து மேல் நிறுத்த அதுசெய்யும் மல்லாட்டம் ஒன்றுமே சுபாவத்தில் அது சுயாதீனமுள்ளது என்னும் உண்மையை விளக்கிக்காட்டச் சிறந்த சான்ரும். இப்படியே இன்னும் கீழ்த்தரதலங்களுக்குச் செல்வோமாகில் அவ்விடங்களில் படிக்குப்படி மேல்தரதத்துவமானது கீழ்த்தரதத்துவத்தை ஆளச்சுயாதீன முள்ளதென்றும் அப்படிச்சுயாதீனமுள்ளதாயினும் கீழ்த்தரதலத்தில் அது பூரணமாய்ப்பிரசன்னமாதல் விக்கினப்படுகின்றதென்றும் நாம் காண்கின்ரும். மேலிருந்து படிப்படியாய்க் கீழிறங்கிப்பார்த்து வந்ததற்குமாருக இனிக்கீழ் ஆரம்பஞ்செய்து மேலேறிக்கொண்டேபோய்ப்பார்க்க இந்த ஓர் உண்மையேதுலங்குகின்றது. ஒரு மனிதனுடைய அவயவங்களை விலங்கிட்டுத்பந்தப்படுத்திவிட்டால் அவன் அவயவங்களுக்கு இயற்கையாயுள்ள தசை நரம்புக்கட்டின் சந்தியின் பூரண விளையாட்டைக் கடினபதார்த்தமாகிய இரும்புதடுத்து விக்கினப்படுத்தும். ஆயினும் விலங்கிடுவதற்கு முன் அவன் அவயவங்களுக்குண்டான தசை நரம்புக்கட்டின் சக்தியானது அணுவளவும் குறையாமலே விலங்கிட்ட பின்னும் அந்த அவயவங்களிலிருக்கின்றது. ஆனல்தற்சமயம் அந்தச்சக்தியானது வினைமுயற்சியில்மாத்திரம் தடைப்பட்டிருக்கின்றதே யல்லாமல் வேறில்லை. அதைப்பந்தப்படுத்திக்கொண்டிருக்கும் தளைகளை முறித்துத் தள்ள அதுசெய்யும் முயற்சிகளிலேயே அதன்பலத்தைக்காணலாம். அசைந்துவீசும் காக்ஷிகள் தடைபடினும் தசைநரம்புக்கட்டின் உரத்தைத்தாராளமாய்ச்செலவிடல் செய்வதைத்தடுக்க இரும்பில் ஒருவன்மையுமின்று. ஆனல்இந்தத் தசைநரம்புக்கட்டின் உரமானது அதற்குக் கீழ்ப்பட்ட தசை நரம்புமுதலிய ஸ்தூலப்பிரகிருதியால் ஆண்டு நடத்தப்படாமலிருக்கவும் அந்த உரத்தின் செலவு அதற்கு மேலாய காமக்கூறினல் நிர்ணயிக்கப் படுகின்றது ; காமக்குரோதாதிகளும் விருப்பு வெறுப்புக்களும் இந்த உரத்தை எழுப்பி இயக்கவும் ஆண்டுநடத்தவும் அதற்குப் போக்குவழி காட்டவும் கூடும். தசைநரம்புக்கட்டின் உரமானது காமக்குரோதாதிகளையும் விருப்பு வெறுப்புக்களையும் ஆண்டுநடத்தமுடியாது ; அதை நோக்க இவைகள் சுயாதீனமுள்ளன. அதன் செலவுஇவைகளின் துணையால் நியமிக்கப் படுகின்றது. இன்னும்பார்க்க நான்காவது கூருகிய காமமானது அதற்கு மேலாய அறிவால் அடக்கியாளப்பட்டும் செலுத்தப்பட்டும் நிர்ணயிக்கப் பட்டும் வருகின்றது. ஐந்தாவது கூருகிய மனஸ் அல்லது அறிவை நோக்க இந்த நான்காவது கூருகிய காமம் பந்தப்பட்டது. சுயாதீனமில்லது. ஆகையாற்ருன் காமக்கூறு எழுப்பும் ஆசைகளில் எந்த ஆசைக்கு இடங்கொடுக்கலாம். எந்தச் செய்கையைச் செய்யலாம்என்று இஷ்டம்போல் தேர்ந்துகொ

ள்ளுவதற்கான சுயாதீன உணர்ச்சி நமக்குண்டு. கீழ்த்தரமனஸ் ஆனது கிராமத்தை நடத்தவரும்பொழுது கீழ்நான்கு கூறுகள்சேர்ந்த சதுஷ்க மாகிய மிருகம்மேல்மூன்று கூறுகள்சேர்ந்த திரயம் என்னும் ஆன் மாவுக்கு உபயோகமான துணையாயிருக்கும்படியான தனக்கு நியமித்த சரியான ஸ்தானத்தையடைகின்றது. மேலும் அது தனக்குமேலான தாகவும் தன்னை நோக்கச் சுயாதீனமுள்ளதாகவும் இருப்பதாகத்தெரி யும் அறிவினுல் செலுத்தப்பட்டு அவ்வழித்தாய் நடக்கின்றது. இவ்விடத்து அநேகர் மனத்தில் " உயர்தரமனஸ்வின் இச்சையைப்பற்றி என்ன ? அதுவு ந்தனக்குக்கீழாயுள்ள சகலத்தையும் நோக்கச்சுயாதீனமுள்ளவைகளாயிருக்க வுந் தன்னுடைய முறையில் தனக்குமேலாயுள்ள ஒன்றுக்கு அடிமைப்பட்டு அதனுல் நியமிக்கப்படுகின்றதா ? " என்னும் வினு உதிக்கும். ஆனுல் நமது புத்திக்கெட்டாததும் அந்த வெகு உயர்ந்த தலங்களில் பரம் ஆகிய ஆன்மா உணர்ந்தறிவதை வாக்கினுல் இலகுவில் சொல்லக்கூடாததுமாகிய இடமாக் கும் நாம் இப்பொழுதுவந்து நிற்கும் இடம். அந்த இடத்திலும் மற்றஇடங்க ளிற் போலவே உண்மையான சுயாதீனமானது சர்வபரிபூரண அகண்டதத் துவமான சச்சிதானந்த ஈசுவர அமைப்பின் ஒழுங்குக்கு ஒத்தேயிருக்கவே ண்டும், திருவருள் வழித்தாய்நின்று திருவருள் வழியாய் நடக்கை பூரணசுயா தீனமும் பூரண அடக்கமும் ஒன்று சேர்ந்துபொருந்தியே யிருக்கவேண்டும் என்றும் கனவுகண்டு மறந்ததைப்போல் மங்கலாய்மாத்திரம் நாம்உணரக் கூடுமேயொழிய அந்த நிலையை விவகரிக்க முடியாது.

இவ்விதமாக சுயேச்சையென்னும் விஷயத்தைப்பற்றித்தவசிகாமணி யாகிய ஸ்ரீமத் அன்னிபெஸண்ட் அம்மை விரித்துக்கூறி அப்பால் " இஃது உண்மையாகவேறு கருதலுங்கூடிய விஷயம்- ஆனுல் இப்படி இங்குவரைந் தகருத்தின் வழியே சிந்திக்கச் சிந்திக்க மாணுக்கன் இவ்விஷயத்தில் அதிக ஒளி விளங்கக்காண்பன் " என்று அருளிச்செய்கின்றனள்.

தி. மீனுக்ஷிசுந்தரம்பிள்ளை.

---

குறிப்பு:—இவ்விடத்தில் இச்சை யென்பதும் சங்கற்பம் என்பதும் ஒன்று.

# "ஸ்ரீ தோபதேசத்தின் ரகசியார்த்தம்."

பாண்டவ சகோதரர்களான யுதிட்டிரன் வீமன், அருச்சுனன், நகுலன் சகாதேவன் ஐவர், பாண்டுவின் குமாரர்களென உலகப்பிரசித்தியாய்த் தெரிந்திருந்தபோதிலும், அவர்களில் ஒவ்வொருவருக்கும், உண்மையாகவே, தனித்தனி ஒவ்வொரு பிதா உண்டென்றும் அப்பிதாவின் அம்சாவதார மென்றும் மகாபாரதத்திற் சொல்லியிருக்கிறது. அஃதாவது ஜேஷ்டப்பிராதாவானயுதிட்டிரரைத்தருமநந்தனரென்றும், வீமனை பவனசுதனென்றும், அருச்சுனனை இந்திர குமாரனென்றும், நகுலசகதேவர்களை பானுவின் மைந்தர்களான அசுவினி குமாரர்களின் மக்களென்றும் இவ்விதமாய் அவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் தந்தையரின் அம்சாவதாரமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் இவர்களில் ஒவ்வொருவனும் தனக்குரிய ஒரு சிறந்த பூதத்தின் பிரதிநிதியாக நின்று தொழிலை நடத்தி, அவ்வப்பூதத்தின் அபிமான தேவதையாயிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதமாய்த் தருமன் பொறுமைக்குங்ஷமாகுணத்திற்கும் பிரதிநிதியாக நின்று பிருதிவி ஸ்தானத்திலும், பவனன் பராக்கிரமத்திற்குப் பிரதிநிதியாக நின்று வாயுஸ்தானத்திலும், இந்திரன் ஜீவாத்துமாவுக்குப் பிரதிநிதியாக நின்று ஆகாச (Ether) ஸ்தானத்திலும், அசுவினிகுமாரர்களிருவரும் ஏனைய பூதங்களாகிய அக்கினி, ஜலம் இவைகளுக்குப் பிரதி நிதியாக நின்று அவற்றின் ஸ்தானங்களிலும் ஏற்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு பாண்டவ சகோதரர்கள் ஐவரும் உண்மையாகவே மனுஷ்யத்துவத்திற்குக் காரணமாயுள்ள பஞ்சபூதங்களின் பிரதிநிதிகளாய் இருப்பதாயும் இப்படி ஒவ்வொரு பூதமும் முறையே மனிதனது இருப்பிற்கு அத்தியாவசிய மாயிருப்பதாகவும் தெரியவருகிறது. இவ்வண்ணமே இவ் வைவரின் மனைவி சதியாகிய துரோபதையைத் துருபதராஜன் குமாரியாகக் காட்டியிருந்தபோதிலும் அதே மகாபாரதத்தில் அவ்வம்மை துருபதரின் புத்திரியல்லளென்றும் ஆனல் பெற்றோர்கள் இன்னாரென்று அறியக்கூடாத வேறோர் இரகசியப் பிறவிதானென்றும் நாம் காண்கிறோம்.

பாண்டவர்களைப்போல இவளும் யோகமாயையின் நராரோபமே. ஆகையாற்ருன் கணக்கற்ற விசித்திர மாயாசக்தியோடு கூடிய மேற்கூறிய ஐவராகிய பஞ்சபூதங்களோடும், அவசியமாய்ப் பொருந்தியிருக்கும்பொருட்டுத் துரோபதை யென்னும் மாயை இவ்வைவருக்கும்பொது மனைவி யாயினள். பரமாத்துவாவின் ஸ்தானத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் நின்றதினுல் மனிதனது எழுகூறு இவ்வாறு பூர்த்தியாகிறது.

சுருக்கமாய்ச் சொல்லப் புகுங்கால் மேற்கூறியவர்களில் நால்வரை மனிதனது ஸ்தூல சரீரமாகவும் அருச்சுனனை ஜீவாத்துமாவாகவும், ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பரமாத்மாவாகவும் அறிகிறோம். ஜீவாத்துமாவும் அதன் துணையாகிய மாயையும் மற்றவைகளைப்பார்க்கிலும் பரமாத்துமாவுக்குச்சதா அண்மையிலிருப்பனவாகையால், அருச்சுனனும் துரோபதையும், ஸ்ரீகிருஷ்ணனுக்கு மற்றவர்களைக் காட்டிலும் பிராண நண்பினரென்று சொல்லப்பட்டிருக்கின்றனர்.

பாண்டவர்களுக்கு அதிலும் முக்கியமாய் அருச்சுனனுக்கு விரோதிகளான இக்கௌரவர்கள் யார் என்ற கேள்வி ஏற்படுகிறது? அச்சத்துருக்களில் அனேகர் அருச்சுனனுக்கு இரத்தசம்பந்தத்தினுல் நெருங்கிய பந்துக்களாய் இருக்கிருர்கள் என்ற விஷயத்தை யோசிக்குங்கால், இச்சத்துருக்கள் மனிதர்களுக்கு நேரிடக்கூடிய துக்கங்களும் தீமைகளும் தவிர வேறல்ல வென்றும், இவைகளில் அனேகம் மனிதனது இரத்தம் அல்லது ஸ்தூல உடலில் பிறக்கின்றன என்றும் சுலபமாய் நாம் அறிந்துகொள்ளுகிறோம். ஆகையால் கௌரவர்கள் மனிதனது கெட்டசெய்கைகளும் அவைகளுக்குச் சம்பந்தமானவைகளுமே யல்லாமல் வேறல்லர். ஸ்ரீகிருஷ்ணபகவான் அருச்சுனனுக்குப்போதித்த தத்துவோபதேசத்தில், அவன் ராஜரீகம் அடையவேண்டுமானுல் (அதாவது தன்னடக்கம் இன்னதென்றுதெரிந்து கொள்ளவேண்டுமானுல்) இச்சத்துருக்கள் எவ்வளவு நெருங்கிய பந்துக்களாயிருந்தபோதிலும், அவர்களை முன்னர் ஜயித்தேதீரவேண்டும் என்று வற்புறுத்தினுர்.

இக் காரணம் கொண்டே அறிவைப் புகட்டுவதற்காக யுத்தபூமி (அதாவது இச்சடலம்) தக்க இடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டி

ருக்கிறது. எத்தனை முறை ஜீவாத்துமா ஞானத்தை அடைய முயன்றாலும் தன் கெட்ட உணர்ச்சிகளால் ஜயிக்கப்பட இடங்கொடுக்கிற தென்பதையும், சுகுணங்களான சகவாசத்துக்கு யோக்கியமான இஷ்டர்களால் கூடிய சகாயம் செய்யப்பட்டாலொழிய தன் அறிவையே முற்றிலு மிழக்க நேரிடுகிற தென்பதையும் நிரூபிக்க, அருச்சுனன் சோகப்பட்டதே ஓர் போதுமான சாக்ஷியாயிருக்கிறது. அருச்சுனனுடைய இரதமானது ஸ்ரீகிருஷ்ணனால் சாரத்தியம் செய்யப்பட்டது. இரதம் என்பதற்கு வடமொழியில் "மனித சரீரம்" என்றும் "வாகனம்" என்றும் உரைக்கலாம். இப்பிரஸ்தாப சங்கதியில் மனிதன் தன்னிடத்திலுள்ள கோபங்களையும் கெட்ட எண்ணங்களையும்வென்று தன் ஆத்துமாவுக்கு முக்தியைக்கொடுப்பிக்கத்தீர்மானிப்பானாயின், ஒரே இரதத்தில் அல்லது சரீரத்தில், ஜீவாத்துமாவும், பரமாத்துமாவும் இருக்கையிலும் இவர்களைச் சுற்றியும் நடந்துகொண்டிருக்கும் சிறு சண்டைகளின் மத்தியிலும் பரமாத்துமாவின் உபதேசத்தை முன்னர் கேட்டு அதன்படி நடக்கவேண்டும்.

மேற்கூறிய இரகசியார்த்தத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள, இதை வாசிப்பவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் யாதெனில் இப்பாண்டவர்கள் விண்ணுலக மேறுகையில் மாயையாகிய துரோபதை முதலிலும் பிருதிவி அல்லது தேகத்தின் ஸ்தூலக் கூறாகிய யுதிட்டிரன் கடையிலும் அந்தர்த்தானமாயினர் என்பவையே. தேகத்தின் அனேக கூறுகளுள் சம்பூரணமான ஒற்றுமை இருக்கிறது என்பதையும், இவை முழுமையும் இவ்வளவு அழகாய் யோசித்து அமைத்த கிரந்த கர்த்தாவின் சாமர்த்தியத்தையும் நன்றாக அறிந்து கொள்ளலாம்?

பல்லடம், }
17—8—05. }

M. ராகவேந்திராச்சார்,
ஸ்கூல் உபாத்தியாயர்.

352



# ஜப்பானிய சரித்திரம்.

(முகவுரை)

தற்காலத்தில் உலகத்தில் ஒவ்வொருவருடைய கண்ணும் கருத்தும் ஜப்பானியர் மீது பதிந்து கிடத்தலின் இவர்கள் சென்ற நூறு வருடங்களுக்குள் கல்வி, செல்வம், நாகரீகம், நடை, உடை, புஜபல பராக்கிரமங்களில் அடைந்துள்ள அற்புதமான அபிவிர்த்திகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் இப்பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு விருப்பா யிருக்குமென்றெண்ணி நான் தெரிந்த வரையில் அவற்றைச் சுருக்கமாக எழுத லுற்றேன்.

## அதிகாரம். க.

## ஜப்பான் இராச்சியம்

ஜப்பான் மகாராஜ்யம் :—பெரிதும் சிறிதும் ஆன அநேக ஆயிரம் தீவுகள் சேர்ந்தது. இத்தீவுகள் ஆசியா கண்டத்தின் கீழ்ப்புறத்துள்ள சாந்த மகா சமுத்திரத்தின் (பஸிபிக் மகா சமுத்திரம்) வடமேற்குப் பாகத்தில் தென்வடக்காக நெடுந்தூரம் பரவியுள்ளன. இவற்றுள் முக்கியமான பெருந்தீவுகள் நான்கு. அவையாவன யஸ்ஸோ, நிப்பன், ஷிகாகு, க்யூஷு என்பவையாம். இவற்றையே சாதாரணமாக ஜப்பான் இராச்சியம் என்பர். இவற்றுள் யஸ்ஸோ வடக்குக் கோடியில் உள்ளது. மலைகளடர்ந்த அதி சீதளமான தேசம். இங்கு ஜப்பானியர்கள் குடியேறுவதற்குமுன் ஆதிகாலம் தொட்டிருந்த பூர்வீக ஜனங்களின் சந்ததியார் ஆங்காங்கு சொற்பமாக இருந்து வருகிறார்கள். இது வர்த்தக விஷயமாகவாவது துரைத்தன விஷயமாகவாவது அவ்வளவு முக்கியமானதன்று. ஹக்கோடேட் என்று ஒரு துறைமுகம் உள்ளது.

இதன் தென்புறத்துள்ள நிப்பன் என்பது மற்றத்தீவுகள் யாவினும் பெரிது. நிப்பன் என்றால் பெருநிலம் என்று பொருள். இது தென்வடல் 1130 மைல் நீளமும் கிழமேல் 200 மைல் அகலமும் உள்ளது. சிற்சில விடங்களில் அகலம் 100 மைலுக்கு மேலே

கூட இல்லை. இத்தீவின் மத்தியில் ஓர் மலைத்தொடர் செல்லுகின்றது. அதன் உயர்ந்த கொடுமுடிக்குப் பூசியாமா என்று பெயர். இது 12500 அடி உயரமுள்ளதாய், வருடத்தில் பத்துமாதம் பனியால் மூடப்பட்டிருக்கும் ஓர் எரி மலை. இது இவ் விராச்சியத்துக்குத் தலைநகராகிய டோக்கியோ வுக்கு அறுபது மைல் தூரத்தில் உள்ளது. ஜப்பானியர் இம்மலையைப்பற்றி வெகுவாகச் சிறப்பித்துக் கூறுவர். மேலே கூறிய மலைத்தொடர் இத்தீவை இரண்டு பாகமாகப் பிரிக்கின்றது. இதில் உற்பத்தியாகும் நதிகள் எடுத்துச் சொல்லத்தக்க சிறப்பினவல்ல. தெற்கு நோக்கிப் போகப் போகப்பூமி சமபரப்புள்ளதும் வளம் செறிந்ததுமாயுள்ளது. கீழ்ப்புறத்தில் சமுத்திரச் சாரலினால் சீதோஷ்ணஸ்திதி மிதமாயும் இனிதாயும் உள்ளது. மேற்புறத்தில் சீதோஷ்ணஸ்திதி கடுமையாயுள்ளது. தலைநகராகிய டோகியோ கீழ்ப்புறத்துள்ளது. இது தான் இப்போது சக்கிரவர்த்தி யிருக்கும் இடம். இங்கு எல்லாத் துரைத்தன விவகாரங்களும் நடக்கும். இதைச் சார்ந்த துறைமுகத்துக்கு யோகோஹாமா என்று பெயர். இத்துறைமுகம் பெற்றுள்ள பிரசித்தி யெல்லாம் சென்ற சில வருடங்களுக் கிடையேதான் பெறப்பட்டது. இத் தீவின் மேல் புறத்தில் கியோடோ என்னும் நகரொன்றுள்ளது. இது முன் நெடுங்காலம் சக்கிரவர்த்தியின் வாசஸ்தானமா யிருந்தது. இப்போது இதற்கு மகிமைகுறைந்து போய்விட்டது. இந்நகரங்கள் தவிரத்தெற்கில்ஒஸாகா கோபி என்று இரண்டு துறைமுகங்கள் இத்தீவில் இருக்கின்றன. இப்பெரியதீவுக்குத் தெற்கில் ஷிகாகு, க்யூஷ்யூ என்னும் மற்றிரண்டு தீவுகளும் இருக்கின்றன. இவற்றிற்கும் நிப்பனுக்கும் மத்தியில் ஒரு சிறியகடல்உள்ளது. இது 240 மைல்நீளமுள்ளதாய் அநேக சிறுதீவுகள் நிறையப்பெற்றுள்ளது. இக்கடல் உலகில் உள்ள அநேக அழகான காட்சிகளில்ஒன்று. கீழ்ப்புறத்துள்ளஷிகாகுவில்பிரசித்திபெற்றநகரம்ஒன்றும் இல்லை. மேல்புறத்துள்ள கியூஷ்யூவில் நாகசாகி யென்றோர் துறை முகம் இருக்கின்றது. இது நெடுங்காலம் ஐரோப்பியவர்த்தகத்துக்கு முக்கியஸ்தானமாயிருந்தது. சிறிதுகாலத்துக்கு முன்னரே சீனாவை வென்று சேர்க்கப்பட்ட பார்மோசா முதலான தீவுகளடக்கம். இவ்விராச்சியத்தைச் சேர்ந்த தீபசமூகங்களின் மொத்த விஸ்தீரணம் 160,000 சதுரமைல். இதன்ஜனத்தொகை நான்குகோடியே ஐம்பது லக்ஷம். ஜனத்தொகை நாளுக்கு நாள்பெருகிக்கொண்டே வருகிறது.

## அதிகாரம் 2.

## சென்ற நூற்றுண்டின் துவக்கத்தில் ஜப்பானியர் இருந்த நிலைமை.

ஜப்பானியர் சென்ற 100 வருடங்களுக்கிடையே அடைந்துள்ள நாகரிகம் முதலான அபிவிருத்திகளைச் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளுவதற்கு அவர்கள் அதன்முன் எந்தநிலையில் இருந்தார்களென்று தெரிந்துகொள்வது அவசியம். முதற்கண் அவரது அரசும் துரைத்தனமும் அக்காலத்தில் எப்படியிருந்தது என்று கவனிக்கத்தக்கது. இவ்விராச்சியம் எண்ணில்காலமாய் இருந்ததுபோலவே அப்போதும் முடிமன்னர் ஆளுகைக்கே உட்பட்டதாயிருந்தது. ஜப்பானியர்களின் கொள்கைப்படி மிக்காடோ வென்னும் சக்கிரவர்த்தி தெய்வப்பிறப்பென்றும் மதத்துக்குத் தலைவனென்றும் கருதப்பட்டிருந்தனன். அவன் ஒருவேளை தன்இஷ்டப்படியோ அல்லது பிறரது நிர்ப்பந்தத்தாலோ அரசாட்சியைப் பிறர்பாலொப்பித்துத் தான் துரைத்தனத்தினின்று ஒழிந்திருந்தபோதிலும் அவனே இராச்சியத்துக்குச் சுதந்திரன். அவன்பெயராலே துரைத்தனகாரியங்களெல்லாம் நடத்திவரற்பாலது. இராச்சியத்தில் எவ்விதக் கலகங்களும் மாற்றங்களும் உண்டானபோதிலும், எவ்வெவர் தத்தம்நிலைமையை இழக்கவரினும், சக்கிரவர்த்தியின் ஸ்தானத்துக்கு யாதும் பங்கமில்லை. அவனுக்கு யாதோரிடையூறும் வருதலில்லை.

சக்கிரவர்த்திக்கு அடுத்தபடியில் இருந்தவன் டேய்மியோவென்னும் அதிபதி. இவன் நமது தேசத்தில் உள்ள ஜமீன்தாரனை அல்லது பாளையகாரனைப் போன்றவன். இப்படிப்பட்ட அதிபதிகளில் கொஞ்சம்குறைய முந்நூறுபெயர்கள் அக்காலத்தில் இருந்தார்கள். இவர்களுக்குத் தங்கள்தங்கள் நாடுகளில் துரைத்தனவிஷயமாகச் செலுத்தும் அதிகாரத்தைத் தவிர மதசம்பந்தமாக எப்படிப்பட்ட அதிகாரமும் இல்லை. இவர்கள் சக்கிரவர்த்திக்கு முற்றிலும் உட்பட்டு அவனுக்குவேண்டியபோது படைத்துணையாகத் தம்பரிவாரங்களோடு சென்று யுத்தம் செய்யக் கட்டுப்பட்டவர்கள். ஒவ்வொரு டேய்மியோவுக்கும் கீழ் சாமுரேய் என்று போர்த்தொழிற்குரிய க்ஷத்திரி

யர் போன்ற ஒருவகுப்பார் இருந்தார்கள். இவர்களுக்கிருந்த உரிமையும் சிறப்பும் டெய்மியோவுக்குள்ள நாள்முதல் இருந்துவந்தன. முதலில் இவர்களுக்குப் போர்புரிதலொன்றேயன்றி வேறேகாரியம் இல்லை. ஆயினும் பின்பு இதரவிஷயங்களிலும் இவர்கள் சம்பந்தப்பட்டுவந்தார்கள். இவ்வகுப்பினர் தாம் பிற்காலத்தில் ஐரோப்பா முதலான அயல்தேசங்களுக்குச் சென்று அங்குள்ள நவீனசாஸ்திரங்களைக் கற்றறிந்து அவற்றைத் தம்நாட்டிற் பரவச்செய்து தமதுதேசத்துக்குண்டாகிய சிறப்புக்கும்செல்வத்துக்கும் காரணபூதராயினர். முற்காலத்திலும் தற்காலத்திலும் ஜப்பானுக்குச் சித்தித்த கல்வியெல்லாம் இவர்மூலமாகவே சித்தித்தது.

பன்னிரண்டாம் நூற்றூண்டின் இறுதிவரையில் சக்கரவர்த்தியின் அதிகாரமே இராச்சியத்தில் தலையெடுத்திருந்தது. டெய்மியோக்கள் ஒவ்வொருவரும் அவன் ஆணையின்வழியே நின்றுவந்தனர். அப்போது டெய்மியோக்களில் முதன்மைபெற்றவனுகிய யோரிடோமோ என்பவன்ஒருவன் தன்புயவலிமையாலே அநேகவெற்றிபெற்று இராச்சியத்தில் எவரினும் வலியுடையோனுயினன். ஆயினும் அவனுக்குச் சக்கரவர்த்தியைத் தள்ளிவிடவேணும் என்னும் எண்ணம் சொப்பனத்திலும் இல்லை. அவன் அக்காலத்தில் இராஜதானியாயிருந்த கியொடோவுக்குச் சென்று அங்குச் சக்கரவர்த்தியைக் கண்டு அவனைத் தன்வசப்படுத்தித் தான்கோரினபடி சீர்திருத்தங்களைச் செய்விக்கக் கருதினுயினும் அவன்கருத்து நிறைவேறவில்லை. சக்கிரவர்த்தி தனது துர்மந்திரிகளது துராலோசனையாலே அதற்கு இணங்கினுனில்லை. அதனல் யோரிடோமோ வென்பவன் அத்தீவின் கீழ்ப்புறத்தில் இப்போதுள்ள யோகோஹாமாவுக்குச் சமீபத்தில் காமகூரா என்னும் ஓரிடத்தில் தன் அதிகாரத்தை யேற்படுத்தினுன். இவன் சக்கிரவர்த்தியின்பால் ஷோகன் (மகாசேனுதிபதி) என்னும் பட்டத்தைப் பெற்றதுமல்லாமல் ஒவ்வொருமாகாணத்திலும் சக்கிரவர்த்தியின் பிரதிநிதியாயிருந்து அரசுசெலுத்திவரும் அதிபதிக்குத் துணையாக ஒவ்வொரு சேனைத்தலைவனைத் தான் நியமித்து அனுப்பிக்கும்படியான உரிமையையும் பெற்றுன். இவ்வுபாயத்தால் சிறிதுகாலத்துக்குள்ளாக இந்த ஷோகன் என்பவன் சமஸ்த அதிகாரத்தையும் தானேபெற்று சக்கிரவர்த்தியைப் பெயருக்குமாத்திரம் அந்த ஸ்தானத்தில் இருப்பவனுகச் செய்துவிட்டான்.

ஷோகன் என்னும் இந்த ஸ்தானமானது முதலில் யோரிடோமோவின் வம்சத்தில் பாரம்பரியமாய்ச் சிலகாலம் வகிக்கப்பட்டுவந்தது. பின்பு அந்த வம்சத்தினின்று நீங்கிப்புயவலியாற் பெருமை பெற்ற மற்றயாரேனும் ஒரு டெய்மியோவாலும் அவன் சந்ததியாராலும் வகிக்கப்பட்டு வந்தது. பின்பு அதுவும்போய் உயர்ந்த வம்சத்தாரால் வகிக்கப்படுவதென்னும் நியதியில்லாமல் எவன் ஒருவன் புயவலியால் சிறந்தானோ அவனுக்குரியதாய்விட்டது. 1596-ம் வருஷத்தில் டேய்கோஹிதேயோஷி யென்னும் ஒரு வீரனாலும் பின்பு அய்யாசு என்னும் மற்றோர் வீரனாலும் அத்தானம் கவரப்பட்டது. இந்த அய்யாசு என்பவன் 1600-ம் வருஷத்தில் செகிகாஹாரா என்னும் சண்டையில் தன்னெதிரிகள் யாவரையும்ஜயித்துச்சக்கிரவர்த்தியால் ஷோகன் என்னும் ஸ்தானத்தைப்பெற்று 250-வருடகாலம் தன்சந்ததியார் அப்பட்டத்தைத் தாங்கிவரும்படியான பெருமையைப் பெற்றான். இவன் சந்ததியாருக்கு டோகுகாவா வம்சத்தாரென்றுபெயர். இவன் யெடோவைத் தனது இராஜதானியாக்கிக்கொள்ள அஃது இன்றும் ஜப்பானுக்கு இராஜதானியாக இருந்துவருகிறது.

இந்த அய்யாசுவென்பவன் போரில் வல்லசூரனாய் தான்பெற்ற தானத்தைத் தனது புயவலியாலே பெற்றானாயினும் இவன் புகழ் அம்மட்டோடு நின்றிலது. இவன் துரைத்தனவிஷயத்தில் மகா நிபுணன் என்று அதிலும் மேலான புகழைப் பெற்றவன். அயல்தேச ஸ்திதிகதிகளை நன்றாயறிந்தவன். தன்சொந்த தேசத்தில் அநேக சீர்திருத்தங்களைச் செய்தவன். இன்றைக்கும் இவனை இவன்நாட்டார் இவனது சௌரியத்திலும் இவனது துரைத்தனத்திறமைக்கே மேலாக மெய்ச்சிக்கொண்டாடுவார்கள். அடங்காது எதிர்த்துக்கலகித்த டெய்மியோவென்னும் பிரபுக்களையடக்கி அவர்களை நயப்படுத்திச் சிநேகம்செய்து தன்வசப்படுத்தினான். அவரது காரியாகாரியங்களைத் தெரிந்து அவரது நடவடிக்கைகளைக் கண்டித்துச் சீர்திருத்துவதற்கு அநுகூலமாக அவர்களை ஐந்துவகுப்பினராகப் பிரித்து அவர்தொகையையும் 263 வராக வரையறுத்தான். ஜனங்களை இந்துக்களாய் நமக்குள் உள்ளதுபோல நான்கு வகையாராக வகுத்து சாமூரேய் என்னும் போர்த்தொழில்செய்யும் க்ஷத்திரியர்களை முதலிலும் அவர்க்குப்பின் பயிர்த்தொழில் செய்யும் வேளாளர்களை இரண்டாம் தரத்

திலும், அவர்கருப்பின் படைககலங்கள் முதலிய கருவிகளைச் செய்யும் கைத்தொழிலாளிகளை மூன்றும் தரத்திலும், அவர்க்குப்பின் வர்த்தகம் செய்யும் வணிகரை நான்காம்தரத்திலும் வைத்தான். மதபோதகர்களாகிய புரோகிதர்களை மற்றவர்களோடு வைத்து வருக்க அவன் துணியவில்லை. வர்த்தகர்களைக் கடைநிலையில் வைத்ததனாலே வர்த்தகத்தால் நாட்டுக்குண்டாகும் பெருமையை அவன் உள்ளபடி அறியவில்லையென்றாகித்தலாகும். மதவிஷயத்தில் அக்காலத்திற் பரவியிருந்த ஷிண்டோமதம், புத்தமதம், கன்பூஷியமதம் ஆகிய மும்மதத்தையும் ஒரு நிலையில் பாரபக்ஷமில்லாமல் பரிபாலித்துவந்தான். கிறிஸ்தவமதத்தை மாத்திரம் பொய்ம்மதமென்று புறக்கணித்திகழ்ந்து கண்டித்துக்காலூன்றுமற்செய்து வந்தான். இன்னமும் வித்யாபிவிர்த்தியில் இச்சையுள்ளவனாய் அதற்குத்தக்க உதவிகளையும் செய்துவந்தனன்.

ஜப்பான்தேசத்தில் அக்காலத்தில் இரண்டுமதங்கள் விசேஷமாயிருந்தன. அவற்றில் ஷிண்டோமதம் நெடுநாளாக உள்ளது. புத்தமதம் பின்னர் பிரவேசித்தது. பழையமதமாகிய ஷிண்டோமதப்படி சூரியன் ஓர் பெண்தெய்வமாகப் பாவிக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டுவந்தனன். அத்தெய்வத்தின்வழியே தோன்றினவன் மிக்காடோ வென்னும் சக்கரவர்த்தி யென்னும் கொள்கையராதலின், ஜப்பானியர் தம் சக்கரவர்த்தியைத் தெய்வப்பிறப்பாகவும் மதத்துக்குத் தலைவனாகவும் கருதிவந்தார்கள். ஆயினும் இம்மதத்துக்குரிய சித்தாந்தங்கள் இன்னவையென்று புலப்படவில்லை. இம்மதத்தைச் சார்ந்து அநேகம் கோயில்கள் கட்டப்பட்டிருப்பினும் அவற்றில் விக்கிரகங்களாவது வேறே பூஜார்கமான பொருள்களாவது இல்லை. புத்தமதமாவது கி. பி. ஆறும் நூற்றாண்டில் இந்நாட்டில் பிரவேசித்து முதலில் பிரபுக்களால் அவலம்பிக்கபப்பட்டு வந்தது. பின்பு சில மதபோதகர்கள் ஷிண்டோமதத்திற் கூறப்பட்ட தெய்வங்களும் மகாபுருஷர்களும் சக்கரவர்த்திகளும் யாவரும் புத்த தேவதையினின்றும் தோன்றினவர்கள் என்று போதித்ததினால் அம்மதம் மற்ற ஜனங்களுக்குள்ளும் விசேஷமாகப் பரவலாயிற்று. பதின்மூன்றும் நூற்றாண்டில் இம்மதத்தைப் பேர்பெற்ற மதாசிரியர்கள் இருவர் முயன்று போதித்ததனால் அன்றுமுதல் இம்மதம் இங்

நாட்டுக்கு உரியமதமாயிற்று. இவ்விரண்டு மதத்துக்கும் சக்கரவர்த்தியே அத்தியக்ஷனானவன்.

அக்காலத்தில் டெய்மியோ என்னும் தலைவர்கள் ஜனங்களிடத்தில் அன்புபூண்டு தயவாக ஆண்டுவந்ததினாலே ஜனங்களுக்குள் அதிருப்தியும் வருத்தமும் இல்லாமல் யாவரும் இனிதுவாழ்ந்துவந்தனர். குற்றமும் குற்றவாளிகளும் வரையரவில்லாமற்போகாவிடினும் மொத்தத்தில் ஜனங்கள் நன்னடக்கையுள்ளவர்களாயும் கள்ளுண்டல் முதலிய தீயவழக்கங்கள் இல்லாதவராயும் இருந்தனர். ஆயினும் அக்காலத்தில் அவர்களுக்குள்ளே ஒருகுறைவுமட்டும் இருந்தது. துரைத்தனத்தார் செய்துவந்த நிபந்தனைகளாலே ஜனங்களுக்கும் துணிகரமான செய்கைகளைச் செய்து அயல்நாடுகளுக்குச்சென்று செல்வமும் புகழும் தேடவேண்டுமென்றும் எண்ணமுமில்லாமற் போயிற்று. ஆதலால் அவர்களுக்குக் கிணற்றுத்தவளைபோலத் தம்மூர்க்குப் புறம்பே பிறநாட்டுச் சமாசாரங்கள் எள்ளளவேனும் தெரியாதிருந்தன. ஆயினும் கைத்தொழில்களில் சுபாவமாகவே மிக்க புத்திநுட்பமும் கருத்தும் பார்வையும் கைத்திறமும் பெற்றிருந்தனர்.

ஜப்பான் தேசத்தார் அயல் தேசத்தாரோடு யாதொரு சம்பர்க்கமும் வைத்துக்கொள்ளாவிடினும் கொரியா தேசத்தைமாத்திரம் கவர்ந்துகொள்ளப் பெரும்பிரயத்தினம் செய்தார்கள். இத்தேசம் தமது நாட்டுக்கும் சீனதேசத்துக்கும் இடையில் இருந்தலினாலும் அக்காலத்தில் சீனதேசம் என்றால் ஏதோ மகா பிரமாதமாக ஜப்பானியர்களால் கருதப்பட்டு வந்ததனாலும், அக்கொரியா தேசத்தைத் தாங்கள் சுவாதீனம்செய்துகொள்ளாத வரையில் அது சீனர்களாற் கவரப்பட்டு அதனால் தமது சுதந்தரத்துக்கே கெடுதி விளையக்கூடுமென்று அச்சுற்றிருந்தனர். ஆதலால் ஹிதேயோஷி யென்பவன் ஷோகனாயிருந்தகாலத்தில் அந்நாட்டைக் கவரும்பொருட்டுப்படையெடுத்து இருதிறத்தாரிலும் அநேகர் உயிர்மாளக் கொடிய போர் புரிந்தனராயினும் முடிவில் ஜப்பானியர் தாம் கோரினகாரியம் நிறைவேறாது வாளாமீளவேண்டியதாயிற்று. அப்போரினால் கொரியாவின் நிலைமை மிகவும் கெடுதியடைந்ததேயன்றி வேறு பயனுண்டானதில்லை. அத்தேயத்தின் நகரங்கள் அழிந்து, கைத்தொழில்கள்

நசித்து, விளைவயல்களெல்லாம் பாழாய்ப்போயின. அத்தேயமானது ஜப்பானுக்குக் கற்பகம்போல நாகரிகம் சிற்பவிற்பன முதலிய பலன்களைக் கொடுத்து உதவிவந்ததுபோக இக்கொடிய யுத்தத்தின் பின் இடியேறுண்டு தன்கிளைகள் முறிந்து மொட்டையாகி வனப்பும் வடிவும் இழந்த தடிமரம்போலாயிற்று. பின்பு அய்யாஸுவின் காலத்தில் இருதேசத்துக்கும் சமாதானமுண்டாகி 250 வருடம் வரையில் இரண்டும் நேசமாய் வாழ்ந்திருந்தன.

இதன்பின் நெடுநாள் ஜப்பானியர் அயல்தேசத்தாரோடு விசேஷமான சம்பர்க்கங்கள் வைத்துக்கொள்ளவேயில்லை. தென்கிழக்குக் கோடியில் ஒருதுறையில்தவிர மற்றவிடங்களில் அயல் தேசத்து வர்த்தகக் கப்பல்களுக்கு இடம்கொடுத்தல் இல்லை. தங்கள் ஆசார விவகாரங்களும் தங்கள் யுக்திபுத்திகளும் தங்கள் ஏற்பாடுகளும் கோட்பாடுகளுமே தமக்குப்போதுமானது என்றுயெண்ணியிருந்தனர். அவர்களது போர்ச்சேவகர்களின் கவசமும் ஆயுதங்களும் பழையகாலத்தேற்பாட்டின்படியேயிருந்தன. சிறு ஓடங்களைத்தவிர வேறே பாடக்கப்பல்களில்லை. அவர்கள் ஆயுதமுஸ்தீப்புக்கள் யாவும் பழக்கமில்லாமையால் துருப்பிடித்து உருவழிந்துபோயிருந்தன. ஆயினும் ஒரு விஷயத்தில்மாத்திரம் அவர்கள் தேர்ச்சிபெற்றிருந்தார்கள். இராச்சியம் சுபிக்ஷமாயும் பிரபுக்கள் செல்வமுடையோராயும் இருந்ததினலே சிற்பவிற்பனத்திரவியங்களைச் சனங்கள் விரும்பினதனல் அநேக அழகான கட்டிடங்களும் கைதொழில்களும் அமைப்பதில் மிக்க தேர்ச்சிபெற்றிருந்தனர்.

இவ்வாறு 1800-ம் வருஷத்தில் ஜப்பானியர் ஒருவரோடும் சச்சரவும் சண்டையுமில்லாமல் நிச்சயமாகச் சுகித்து வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் அக்காலத்தில் டெய்மியோவென்னும் பிரபுக்களாலும் அப்பிரபுக்களுக்கெல்லாம் தலைவனுகிய ஷோகன் என்னும் சேனுபதியாலும் ஆளப்பட்டுவந்தனர். சக்கிரவர்த்தி ஈச்வராம்சமாக எண்ணப்பட்டுவந்தபோதிலும் கியொடோவென்னும் இராஜதானியில் யோகநித்திரைசெய்துகொண்டு கவலையின்றி காலம்போக்கி வந்தான்.

இன்னும்வரும்.

எஸ். முத்து ஐயர்.

360

# கங்காரு.

# The Kangaroo.

இரண்டு கால்களினாலேயே செல்லும் நாற்கால்பிராணி ஒன்று உண்டெனில் பலர் நம்புவார்களோ என்று ஐயமுறுகிறோம். இந்தியாவிலும் ஆஸ்திரேலியா ஒழிந்த பிற இடங்களிலும் இதனைப்பார்த்திருப்பவர் சிலரே. அநேகருக்கு இதன் பெயர்கூடத் தெரியாது. இதனைப்பார்த்திருப்பவரும் சிற்சில மிருக காட்சி சாலையில் தான் பார்த்திருக்கக்கூடும். ஆனால் உயர்தரப் பாடசாலைகளிற் கல்விபயிலும் மாணவர்கள் இப்பிராணியின் உருவத்தைப் படத்தில் பார்த்தேயிருப்பார்கள். ஆயினும் அவர்களுக்குக் கூட இது இரண்டுகால்களாலேயே செல்லும் விஷயம் தெரியுமோ என்பது சந்தேகம். இதனைப் பார்த்திராதாரும், இதனைப்பற்றியே கேட்டிராதாரும் இப்படியும் ஓர் பிராணி உண்டென அறிய வியப்புறுதிரார். இவ்வற்புத விலங்கின் பெயர் கங்காரு. இவ்விநோதப் பிராணிக்கு இவ்விநோதப் பெயர் அமைந்த வரலாறே ஓர் விநோதம். அது வருமாறு:—

1770-ம் ௵ ஆஸ்திரேலியாவிற்போய் இறங்கிய ஆங்கிலக் கப்பலோட்டிகள் சிலர், அங்குள்ள காடுகளில், பின்னங்கால்கள் இரண்டினாலேயுமே குதித்தோடிச் செல்லும் இயல்பினதாய இப்பிராணியைக்கண்டு ஆச்சரியமெய்தி, பக்கத்திருந்த வேட்டைக்காரர்களை நோக்கி "இப்பிராணியின் பெயர் என்ன?" என்று வினவ, அவர்கள் "கங்காரு, கங்காரு" என்றனராம். கங்காரு என்ற வார்த்தைக்கு "சொல்வது விளங்கவில்லை" என்றே அர்த்தம். வேட்டைக்காரர் ஆங்கிலமே அறியாதவர்களாயிருந்தமையால் கப்பலோட்டிகளின் கருத்தும் கேள்வியும் இன்னவென அறியும் ஆற்றல் இல்லாதாராய் அவர்கள் சொல்வது தமக்கு விளங்கவில்லை என்பது பொருள்பட "கங்காரு" என்று தமது பாஷையில் விடை கூறினர். ஆனால் இவர்களுடைய பாஷையை அறிந்திராத ஆங்கிலக் கப்பலோட்டிகள் "கங்காரு" என்பது இதன் பெயரென வேட்டைக்காரர் அறிவித்தனர் எனவே எண்ணிவிட்டனர். அதுமுதற்கொண்டு அப்பெயரே அவ்விலங்கிற்கு அமைந்தது என்பர். நிற்க.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
இடம்
அடையாறு, சென்னை-20.

ஆஸ்திரேலியா கண்டமே இப்பிராணியின் உற்பத்தி ஸ்தானமாகும். இப்பொழுது இஃது ஆஸ்திரேலியாவில் மட்டுமேயன்றி டாஸ்மேனியா, நியூகினியா, நியூஅயர்லண்ட், ஆருதீவுகள் முதலிய இடங்களிலேயே மிகுதியும் காணப்படுகின்றது. இது வேறெங்கும் அகப்படுவது அரிது.

## தோற்றம்.

கங்காருவில் பலவகையுண்டு. அதிகப்பெரியது ஆடு அவ்வளவு பருமன் இருக்கும். அதிகச்சிறியது எலியினும் பெரிதன்று. இருகாலாலும் நிமிர்ந்து நிற்குங்கால் பெரிய கங்காரு சுமார் 7 அடி உயரமிருக்கும். மான்தலையைப்போன்றிருக்கும் அதன் சிரசு சரீரத்தையும் பிற உறுப்புக்களையும் உத்தேசித்து மிகச்சிறிதென்றே சொல்லவேண்டும். அதற்கு நீண்ட செவியும் கூரிய மூக்கும் உண்டு. ஏனைய பிராணிகளுக்குள்ளது போல் இல்லாமல் இதன் கீழ்த்தாடை எலும்புகள் இரண்டும் முற்பக்கம் சமமாக வளர்ந்திரா. கங்காருவின் பற்கள் வெகு கூர்மையாக விருக்கும். இவ்வினத்தைச்சார்ந்த எல்லாப் பிராணிகளுக்கும் சரிந்த வயிறுண்டு. பெண்கங்காருவிற்குப் புறவயிற்றில் குட்டிகளிருக்கப்பையுண்டு. இப்பைக்குள் உட்புறமாக வயிற்றினின்றும் வெளிக்கிளம்பிய முலைக்காம்புகள் நான்குள. அதிகக்குட்டையான அதன் முன்னங்கால்கள் இரண்டும் கைகள் போல் வேலைசெய்ய உதவுகின்றனவேயன்றி நடக்க உதவா. இக்கால்கள் கிழங்கு நோண்டவும் சொறிந்துகொள்ளவும் தன்னை எதிர்க்கும் பிராணிகளைக் கிழிக்கப்பற்றவுமே உபயோகமாகும். அன்றியும் இவை ஓரிடத்திலிருந்து தழைமேயும் சமயத்தில் கீழே ஊன்றப்படுவனவாம். இவ்விரண்டு கால்களும் அவ்வைந்து விரல்கள்கொண்டவை. இவ்வைந்து விரல்களிலும் கூரிய வலிமைவாய்ந்த வளைந்த நகங்களுண்டு.

பின்னங்கால்கள் முன்னங்கால்களினும் அதிக நீளமாயும் பலமுள்ளதாயும் இருக்கும். இக்கால்கள் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்களுண்டு. இந்நான்கில் சிறுவிரல்களிரண்டும் ஓர்வகைச் சதைப்பற்றினால் பிணிக்கப்பட்டிருக்கும். இச்சிறுவிரல்களிற்றான் கூரிய

நகங்களுண்டு. இந்நகங்கள் அப்பிராணி தன்னைச் சொரிந்துகொள்ளவும் தன்மீதடையும் அழுக்கை அப்போதைக்கப்போது சுறண்டி எடுத்து சுத்தம்செய்துகொள்ளவும் உதவும். மற்றைய இரண்டு விரல்களிலுமுள்ள நகம் பார்வைக்குக் குளம்புபோலவே இருக்கும்.

வால் மிக்கத்தசைக்கட்டுள்ளதாயும் உரோமத்தினால் மூடப்பட்டதாயுமிருக்கும். அஃது அடிப்பக்கம் அகன்றும் நுனிப்பக்கம் குறுகியும் இருக்கும். அதன் நீளம் 3 அடி. குதிரையின் காலையும் ஓர் அடியினால் முறிக்கக்கூடிய பலம் அதற்குண்டு. கங்காருவின் நிறம் பழுப்பு அல்லது சாம்பல் கலந்த கறுப்பு.

## குண விசேஷங்கள்.

கங்காரு கோபம் மூட்டப்படும்பொழுதல்லாமல் மற்றப்படி ஒருபொழுதும் எதற்கும் தீங்கிழைப்பதில்லை. இயற்கையில் அமரிக்கையானதும் அச்சமுற்றதும் தீங்கற்றதுமான இப்பிராணி தன் சத்துரு தன்னையேனும் தனதுகுட்டிகளையேனும் எதிர்க்கவரும்பொழுது அதனுடன் சண்டித்தனமாய்ச் சண்டையிடும். இதன் முக்கிய சத்துருக்கள் வேட்டைக்காரரும் வேட்டைநாயுமே. ஒருமுறை இதன் எதிரி சிறிதேனும் இதன்கையில் சிக்கிவிடுமாயின் அது பிழைப்பது புநர்ஜன்மந்தான். நாய் எதிர்ப்பட்டால் அதனைத்தனது முன்னங்கால்களால் கரடிபோல் இறுகப்பற்றி அச்சத்தை விளைவிக்கக்கூடிய தசைக்கட்டுள்ள அதன் பின்னங்கால்களின் கூரிய நகத்தால் சாகப்பீறிவிடும். சில சமயங்களில் அதனைக் கரகரவெனப்பற்றியீர்த்து பக்கத்திலுள்ள ஆறு அல்லது குளத்திற்குக் கொண்டுபோய் அதில் அமிழ்த்திக் கொன்றுவிடுவதுமுண்டு. தன் குட்டிகளைக் காக்கும்விஷயத்தில் தனது ஆருயிரையும் ஓர்பொருட்டாய் அஃது எண்ணாது. இதனைப்பழக்கிப் பராமரித்து வருபவரிடம் இது பக்ஷம்பாராட்டும் என்று சொல்லுகிறார்கள்.

## வழக்கங்கள்.

கங்காரு மைதானவெளிகளிலும், மரங்களும் புதர்களுமடர்ந்த காடுகளிலும் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும். நாம் முன்பு கூறியபடி அஃது இடம் பெயர்ந்து செல்வது வலிமைவாய்ந்த அதன் பின்

னங்கால்களாலேயே. அஃது உட்காரும்பொழுது பின்னங்கால்கள் இரண்டுடனும் தனது வலிமிக்க வாலையும் சேர்த்து முக்காலியாக்கி உட்கார்ந்துகொள்ளும். அப்பொழுது முன்னங்கால்கள் தொங்கிநிற்கும். அஃது இவ்வாறு உட்கார்ந்திருக்கும் நிலைமையில்தான் தனது சத்துருவின் வரவு, வாசனை சத்தம் முதலியன எளிதில் உணரும். தன் கண்களை சூக்ஷ்மமாக உபயோகிக்க ஏற்றநிலையும் இதுவே. இதற்குச் செவிப்புலன், கட்புலன், பரிசவுணர்ச்சி ஆகிய இம்மூன்றும் மிகவும் கூர்மை. அச்சத்தால் இது தன்னை தற்காத்துக்கொள்ளுமாறு குதித்தோடுப்பொழுது அதன் உடல் தராசுபோல் நிற்றற்கு வாலையே ஆதாரமாக்கொள்ளும். இது பாய்ச்சலுக்குப் பத்தடி முதல் 30 அடி பாயும். கங்காருவில் பெரிய இனம் தழைத்துச் செழித்த புலங்களிலும் சிறிய இனம் அணிலைப்போல் மரத்திலும் சஞ்சரிப்பது வழக்கம்.

## இரை.

கங்காரு சாகபக்ஷணி. புல், பூண்டு, கிழங்கு, கீரை, தழை பல்வகைப்பயிர் இவை முதலியவற்றைத்தின்னும். சுத்தநீரும் குடிக்கும். இது தனது இரையை கத்தரிக்கோல்போன்ற கூரிய முன்பற்களாற் கறிக்கும்.

## குட்டி.

பிறந்தவுடன் கங்காருக்குட்டி எலிக்குஞ்சைவிட அதிகப்பெரிதாயிராது. அதன்நீளம் ஒரு அங்குலந்தான் இருக்கும். அப்போது அது கண்திறவாமலும் செயலற்றும் இருக்கும். இக்குட்டி தாய்க்கங்காருவால் அதன் வயிற்றுப்பைக்குள் வைக்கப்படும். அவ்வாறு பால் குடிக்குமாறு வயிற்றிற் சேர்க்கப்பட்டவுடன் அது தாயின் முலைக்காம்பைப் பற்றிக்கொள்ள, தாய் தனது தேகத்தை ஒருவாறு சுருக்கிப் பாலை அதன்வாயிற் பீச்சும். இப்பையிலேயே அஃது இருந்து வளரும். தனக்குப்போதுமான பலம் உண்டானவுடன் அது கீழே இறங்கி வயிற்றில் கலநெருப்புக் கட்டிக்கொண்டு தாயுடன் சேர்ந்து புற்கறிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது எங்கேனும் சிறிது சலசலவெனச் சத்தம் கேட்டால் நடுங்கிப் பதறிப் பரபரப்புடன் பைக்குட்சென்று புகுந்துகொள்ளும். அப்பையை

இஃது ஒளிவிடமாகவும் உறைவிடமாகவும் கொள்வது தான் பிறந்து எட்டுமாதபரியந்தமே.

## உபயோகங்கள்.

கங்காரு வேட்டைக்காகமட்டுமேயன்றி சிறந்த உணவாகவும் உபயோகப்படுவதால் அதன் மாமிசம் பெறவும் ஆஸ்திரேலியா கண்டத்தார் அதனை மிகுதியாய்க்கொல்வர். தனியாக இருக்கும்பொழுது இந்தியாவில் குறவர்கள் அணில்களைக்குத்துவதுபோல் ஈட்டிகொண்டு மறைந்திருந்து குத்தியும், கூட்டம் கூட்டமாய் இருக்கும் பொழுது அவற்றைப் பலர்கூடிச் சூழ்ந்துவளைத்து நாய்களைக்கொண்டு "சூ" விட்டும், குண்டாந்தடி, ஈட்டி முதலியனகொண்டு நாயடிகாலங்களில் நாயடிப்பதுபோல் மூளை சிதற அடித்தும் அதனைக் கொன்று வீழ்த்துவர். நாகரீகமுள்ள ஜாதியார்கள் துப்பாக்கியிட்டுச்சுட்டு வீழ்த்துவர். அதன் வாலே மிக்க ருசியுள்ள பாகமாம். அதன் தோலினல் விரலுறை பாதரக்ஷை முதலியன செய்யப் படுகின்றன. நிற்க.

ஆஸ்திரேலியாவே அற்புதப் பிராணிகட்கெல்லாம் உற்பத்திஸ்தானமும் உறைவிடமும்போலும். ஏனெனில், இருக்கமுடியாது என்று நாம் எண்ணக்கூடிய பிராணிகள் பல அங்குள. அவற்றுள் சில கூறுவம். நாற்காற்பிராணியாயிருந்தும் முட்டையிடும் விலங்கு அங்குளது. வாத்தின் மூக்குப்போன்ற நாசியும், ஜவ்வுபோன்ற மெல்லிய தோல்கள் விரல்களின் இடையிற்கொண்ட கால்களும், மெல்லியரோமமும் விசாலமான பாதங்களும் தட்டைவாலுங் கொண்டது மற்றோர் விலங்கு. அவகாசம் ஏற்படும்பொழுது ஆஸ்திரேலியாவின் அற்புதப் பிராணிகள் என்றதலைப்பின்கீழ் வேறு சில பிராணிகளைப்பற்றி எழுதுவோம்.

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராசனாதிபதி,
மாணவர் செந்தமிழ்ச் சங்கம் மதுரை.
&
Asst. Master, A. M. High School,
*Madura.*

# அத்வைதமதம்.

## முதல்பாகம்.

---

"அத்வைதம்" என்கிற சொல்லிற்கு "இரண்டல்லாதது" என்பது பொருள். ஒன்றுக்கு அதிகமான வஸ்துக்களை நித்தியமானவைகளென்று கைக்கொள்ளுகிற வேறு சில மதஸ்தர்களும் ஒரு முறையாக அந்தச்சொல்லுக்கு தாத்பரியத்தைக் கற்பித்துத் தங்கள் மதங்களையும் "அத்வைதம்" என்று அழைப்பதால் அவைகளிலிருந்து இம்மதத்தை வேறுபடுத்திக் குறிப்பதற்காக,

"ஒன்றேதான், இரண்டல்லாதது" எனப் பொருள்படுகிற "ஏகமேவாஇதியம" என்கிற உபநிஷத்வசநத்தை, அத்துவைதிகள் தங்கள் மதத்தை விசேஷித்துக்குறிக்கும் பிரமாணவசனமாகக் கொள்ளுகிறார்கள்.

இந்நாட்டில் பூர்வீககாலம் முதல் (1) நையாயிகமதம். (2) வைசேஷிகமதம். (3) சாங்கியமதம். (4) யோகமதம். (5) பூர்வமீமாம்சமதம். (6) வேதாந்தமதம் என ஆறுதர்சநங்கள் வழங்கிவந்திருக்கின்றன. ஒவ்வொருதர்சநமும் ஒவ்வொருகாலத்திற் பிரபலமாக ஆசரிக்கப்பட்டிருந்தபோதிலும், கடைசியாக வேதவியாஸர் பிரஹ்மசூத்திரங்களை அருளிச்செய்து வேதாந்தமதத்தை ஸ்தாபித்தார். அந்த சூத்திரங்களுக்கு நான்கு ஆசாரியர்கள் நான்குவிதமாகப் பொருள்கூறி பாஷியங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களில் ஸ்ரீசங்கராசாரியவர்களியற்றியிருக்கும் பாஷ்யம் 'அத்வைத' மதத்தை விவரிக்கின்றது. அம்மதத்தின் முக்கியக் கொள்கைகளாவன:—

1. பிரஹ்மம் ஒன்றுதான் நித்தியமானது. மற்றவைகளெல்லாம் அநித்தியமானவைகள்.

2. பிரஹ்மமென்னும் பதம் "பிரஹத்" என்னும் தாதுவையுடையதாய் விஸ்தரிக்கும் தன்மையுள்ளதெனப்பொருள்படும். எது ஆதிகாரணமாயிருந்து சூட்சுமமாகவும் ஸ்தூலமாகவுமிருக்கின்ற பிரபஞ்சமாக ஆயிற்றோ அதுவே பிரஹ்மமென்பது தாத்பரியம்.

3. சூரியனிடத்திற் பிரகாசிக்கும் பிரகாசமும் அக்கினியினிடத்திற்தபிக்கும் தபிப்பும் ஆகிய அந்தந்த சக்தி, சூரியன், அக்கினி, இவைகளைக்காட்டிலும் வேருக இராமல், அதுவேசூரியனுடையதன்மையாகவும், அக்கினியுடைய தன்மையாகவும், இருக்கின்றதுபோல, பிரஹ்மத்துக்கு அந்நியமில்லாததும், பிரஹ்மத்தின் ஸ்வரூபம் அல்லது தன்மையாகவே இருப்பதுமான சக்தி ஒன்று அங்கீகரிக்கப்படுகின்றது.

4. அந்தச் சக்தி பிரஹ்மத்தின் ஸ்வரூபமாகவே இருப்பதால் பிரஹ்மத்துக்கு இரண்டாவது பொருள் என்று கொள்ளுவது பொருந்தாது. ஒரு குணம் அல்லது விசேஷணமானது அதனுடைய விருத்தியினல் குணி, அல்லது விசிஷ்டனை, மாறுபாடு அல்லது விகாரத்துக்கு உட்படுத்துவதுபோல, பிரஹ்மத்தின் தன்மையாகிய சக்தியினல் பிரஹ்மம் விகாரப்படுகிறதில்லை. அதினல் சக்தியை குணமென்று சொல்லுதல் பொருந்தாது. ஆகையால் பிரஹ்மம் நிர்க்குணம் நிர்விசேஷம் நிஷ்களமேயாம்.

5. ஒரு மந்திரவாதி அல்லது யோகி எவ்விதக்கருவியும் கரணமுமின்றியே, ஒரு பொருளை நமது முன்னர் வரவழைத்தால், அவன் சக்தியின் தன்மையும், அப்பொருளை எவ்வாறு கற்பித்தான் என்பதும், நமக்குப்புலப்படாமைபற்றி அவன் சக்தியை "மாயை" என்று சொல்லுவதுபோல, பிரஹ்மசக்தியை "மாயை" என்று சொல்லுகிறோம். "மாயை" என்னும் பதத்திற்கு "இல்லாதது" என்பது பொருள். அஃதாவது தானகவே ஒருபொருளாக இல்லாததென்பது அர்த்தம்.

6. அந்த மந்திரவாதி, அல்லது யோகி, தன்னுடைய சக்தியினல்மட்டும் வேறொரு கருவி கரணமின்றியில் ஒரு பொருளைக் கற்பிப்பதுபோலவும், அந்தச்சக்தியை அவன் தன்னுள்ளே இழுத்துக்கொள்ளும்போது அப்பொருள் மறைவதுபோலவும், பிரஹமசக்தியிலிருந்து பிரபஞ்சம் தோன்றியும், அதனுள்ளே மறைவுமாகின்றது. தோன்றலுக்கு 'சிருஷ்டி' யென்பதும் மறைதலுக்கு 'லயம்' என்பதும் பெயர்.

ஆதலால் காண்பவற்றின் உண்மைமரிலே இப்படியே அறிவில் வையும்;
பேதமாய் வேறென்றில் பிறந்ததிலைக்கயிற்றில் அராப் பிறப்ப தேபோல்
ஆதபனின் வேறிலே, யாதபமென்றே பாவித்தோர்க் காதபந்தான்
பேதமற ஆதபனும் பேணுகிருவிகற்பமிது பேசுங்காலே.

(ஞானவாஸிஷ்டம்).

7. அந்தச் சக்தி பிரவர்த்திக்கவே ஒருமைநீங்கி இருமையுண்டாயிற்று, (ஈஸிதா) ஈசுவரன் (ஈஸிதவ்ய) பிரபஞ்சம் என அப்பிரஹ்மமே இருவகையாயிற்று.

8. அந்தச் சக்தியே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாதலால் அதை "மூலப்பிரகிருதி" என்று சொல்லுவார்கள். இதற்கு "அவ்வியக்தம்" என்றும் பெயருண்டு. இது, சுத்தம், மலினம், தாமஸி என மூன்றுமுறையாக, பிரவிர்த்திக்கின்றது. சுத்தசக்திதான் ஈசுவரனுக்குச் சர்வக்ஞத்துவம் முதலிய தன்மைகளை விளைவித்து முத்தொழில்களையும் நடாத்திப் பந்தப்பட்டிருக்கும் தேகிகளுக்கு அனுக்கிரகம் செய்யும், "வித்யா அல்லது தேவீப்பிரகிருதி" யாம். இதுவே காயத்திரி தேவியாம். மலின சக்திதான், சிற்றறிவோரான ஜீவர்களுக்குக் காரணமாகிய "அவித்தை" யாம். தாமஸிதான், ஜடப்பிரபஞ்சத்திற்குக் காரணமாம். இந்தத்தாமஸியின் காரியம் **விக்ஷேபம்** என்றும் **ஆவரணம்** என்றும் இருவகையாம். விக்ஷேபமானது பிரபஞ்சம் பெருகித் தோன்றுதலுக்கும், ஆவரணமானது பதார்த்தங்களின் சுபாவமறியவொட்டாமல் மறைப்பதற்கும், காரணமாம். ஆவரணமிருவகைக் காரியங்களையுடையது. அவையாவன (1) அதத்பாவம் (பொருளையறியாமை) (2) அன்னியதாபாவம் ஒருபொருளை வேறொன்றாகக் கிரகித்தல் என்பதுமாம்.

9. ஜடசேதனம் கலந்திருக்கும் பிரபஞ்சமானது, சத்தியமுமன்று. அசத்தியமுமன்று. சத்தியமென்பது பிரஹ்மம் ஒன்றுதான். சத்தியமென்னும் கொள்கைக்கு விரோதம். அசத்தியமென்றால் புண்ணியமென்றும், பாபமென்றும், இது செய்யத்தக்கதென்றும், இது செய்யவொண்ணாதென்றும் விதிக்கின்ற சாஸ்திரம் நில்லாது ஆதலால்,

**"தேரிபோருள் என்றுளதல்லப், பொய்யுமலச் சொப்பனத்தின் றிரள் போற்றேன்றும்."** (ஞானவாஸிஷ்டம்.)

பிரபஞ்சம், சத்தியம் என்று துவைதிகள் முதலியவரும், அபாவப் பொருளென்று பௌத்தர்களில் ஒரு வகுப்பினராகிய விக்ஞான வாதிகளும் கொள்வதுபோல் இல்லாமல், சொற்பனம்போல இருந்தும் இல்லாததுபோன்றது, என்பது அத்வைதியர் கொள்கையாம்.

10. ஜீவனென்பது ஒரு பிரத்தியேகமான பொருளன்று. சர்வாந்தர்யாமியாகிய பரமாத்மா, கடாகாசம், படாகாசம்போல ஒவ்வொரு பொருளிலும் கலந்து நிற்கின்றார். பல அலைகளில் ஒரே சூரியனின் பிரதிபிம்பங் காணப்படுமாறுபோல், ஒவ்வொரு அந்தக்கரணத்திலும் அவர் பிரதிபிம்பிக்கிறார். அந்தப் பிரதிபிம்பத்துக்கு ஜீவனென்று பெயர். அந்தக்கரணங்களின் பேதத்தால் ஜீவர்கள் பேதிக்கின்றார்கள்.

"தெளியும்நீரில் உட்புறம்பு செறியும் வெயில்போல் பொருள் அனைத்தில் ஒளிகொள் ஆன்மா நின்றிடுமால்" (ஞானவாஸிஷ்டம்)

(11) ஜீவன்தானே பிரஹ்மமாயிருக்க அதை அறியாமல் ஜடமாகிய தேகத்தையே தான் என்று பாவிக்கிறான். தேகத்துக்குச் சம்பந்தப்பட்ட பொருள்களைத் தன்னுடையவையென்ற எண்ணிக் கொள்ளுகிறான். இம்மயக்கத்துக்கு அத்தியாசம் என்று பெயர். இஃது அவித்தையின் காரியம்.

அத்தியாசத்திலிருந்து— அகங்கதையும் மமதையும்,
அவ்விரண்டிலிருந்து—அபிமானமும்,
அபிமானத்தினால்—இராகத்வேஷாதிகளும்,
அவைகளினால்—கர்த்துருத்துவம் போக்த்துருத்துவம் முதலியனவும்,
அவைகளினால்—நான் சுகி, நான் துக்கியென்னும் பாவனைகளும்,
சுகத்தை நாடியும் துக்கத்தை அகற்றவும் பிரவிர்த்திப்பதினால் } ஓய்வில்லாக்கருமமும் கருமபந்தத்தினால் ஜனனமரணமும் உண்டாகின்றன. இந்தக்காரிய பரம்பரைக்குச் சம்சாரம் என்று பெயர்.

இதுவே பந்தம் என்பார். இப்பந்தத்தினின்று விடுதலையை மோக்ஷமென்பார்.

(இன்னும் வரும்.)

ஓம் தத்ஸத்.

# சைவசித்தாந்தம்.

;o:

(தொடர்ச்சி.)

மனத்தின் பின்னதாக மெய் வாய் கண் மூக்குசெவி யென்னும்ஞானேந்திரியம் ஐந்தும் அத்தைசதவகங்காரத்தினின்றும் முதல்வன் ஆணையாலே தோன்றும். இவை அறியுங்கருவியாகலின் ஞானேந்திரியம் எனப்பட்டன. இவற்றிற்கு விடயமாக முறையே பரிசமும் இரதமும் உருவமும் கந்தமும் சத்தமும் ஆகிய பூதகுணம் ஐந்தும் பொருந்தும். பின்பு ஏனை வைகரியகங்காரத்தினின்றும் வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். இவை தொழில் செய்யுங்கருவியாகலின் கருமேந்திரியங்கள் எனப்பட்டன. இவ்வைந்தின் தொழிலாவன முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமுமாம். அற்றேல் ஆன்மாவின் ஞானக்கிரியைகளை விளக்குதற்கு இந்திரியம் அந்தக்காரணம் கலாதியென்னும் முத்திறத்துள் ஒன்றேயமையுமாகலின், ஏனைய மிகையாம் போலுமெனின் ஆகாது, கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய அவ்விருவகையிந்திரியங்களும், ஒன்றனை விடயிக்கலுறுவார்க்கு உடம்பின் புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகளாம். மனமுதலிய அந்தக்காரணங்கள், அவ்வவ்விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை உடம்பின் அகத்தேநின்று விடயிக்கும் உட்கருவிகளாகும். ஏனைக்கலாதிகளாவன அவ்வந்தக்காரணங்களான் விடயிக்கப்பட்டுவந்த பயனை ஆன்மாவின் இச்சாஞானக்கிரியைகட்குப் பொருத்துவனவாகிய உள்ளந்தக் காணங்களாம். இவை, தம்முள் வேற்றுமையாகலின். மாயையினிடத்துண்டாகிய இம்முத்திறக் கருவிகளாலும் உயிர் பந்திக்கப்பட்டு நிற்கும் என்க.

அவ்விருவகை இந்திரியங்களும் தோன்றியபின் ஏனைப்பூதாதியகங்காரத்தினின்றும் சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் எனக்கூறப்படும் தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றி அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு ஊக்கஞ்செய்வித்து முதல்வன் ஆணையால் உடனிற்கும். இத்தன்மாத்திரைகள் ஐந்தும் அந்தக்காரணங்கள் மூன்றும் ஆகிய எட்டுங்கூடி புரியட்டக வுடம்பாமென்றறிக.

சிலவிடத்தில் சூக்குமதேகம் முப்பது தத்துவங்களால் ஆக்கப்பட்டது என்றுகூறுவது மாறுகொளக்கூறல் என்று மலையற்க, அம்முப்பதும் எட்டினுளடங்கும்; எப்படியென்னில், பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து அந்தக்காரணம் நான்கு, குணம் ஒன்று, அதற்குக் காரணமாகிய பிரகிருதி ஒன்று, கலாதி ஐந்து, இவ்வெட்டினுளடங்குதலால் குற்றமில்லையென்க.

இனி ஓசை எழுத்து உரப்பு மிருதுவு என்னும் விசேஷங்களின்றிப், பொதுவில் சப்தமாத்திரமாயிருப்பது சப்ததன்மாத்திரை. குளிர்ச்சி வெப்பம் என்னும் பேதங்களின்றிப்பொதுவில் பரிசமாத்திரமாயிருப்பது, பரிசதன்மாத்திரை. வெண்மை கருமை முதலான விசேடங்களின்றி, பொதுவில் ரூபமாத்திரமாயிருப்பது ரூபதன்மாத்திரை. தித்திப்பு புளிப்பு முதலான பேதங்களின்றி, பொதுவில் ரசமாத்திரமாயிருப்பது ரசதன்மாத்திரை. நற்கந்தம் துற்கந்தம் என்னும் பேதங்களின்றி பொதுவில் கந்தமாத்திரமாயிருப்பது, கந்ததன்மாத்திரை. இந்தத்தன்மாத்திரைகளாலுண்டாக்கப்பட்ட தத்துவம் பூதமாகும்; அது ஆகாசமுதலான பேதத்தால் ஐந்துவிதமாகும். அவை இந்திரியங்களால் கிரகிக்கப்படுங்குணக்களுக்கு ஆதாரமாகும். அவற்றுள் மற்றப்பூதங்களுக்கு இடங்கொடுத்தலாகிய செய்கையுள்ளது ஆகாசம்; அது சப்ததன்மாத்திரையிலுண்டானதாகையால் சப்தகுணம் ஒன்றையேயுடையது. இந்த ஆகாசம் சப்தகுணம் ஒன்றையேயுடையது என்று எப்படிச்சொல்லலாம்? ஆகாசம் கருமையாய்த்தோன்றுகிறது என்னும் அனுபவத்தால் ரூபமுண்டாயிருக்கிறதே, பரிசமின்மையால் ரூபமில்லையென்னும் அனுமானம் பிரத்தியக்ஷத்தால் அடிபட்டுப்போயிற்றேயென்னில் (உத்தரம்) எந்தவிடத்தில் தூரத்திலிருந்து பாக்கும்போது கருமை தோன்றுகிறதோ அந்தவிடத்திலேயே சமீபமாய்ப் போகும்போது அது தோன்றாமையால், தூரக்குற்றத்தால் வந்ததென்றே கொள்ளப்படும். பின்னும் இந்த ஆகாசத்தைச் சகல மூர்த்த திரவியங்களின் அபாவமாதலால் வேறொரு தத்துவமென்று கற்பிப்பது வியர்த்தமென்னவுங் கூடாது; அப்படிச்சொல்லில் சப்தகுணத்திற்கு ஆதாரமில்லாமற் போகும்; ஆகாசம் அபாவமாகில் மற்றப்பூதங்களுக்கு இடங்கொடுக்கமாட்டாது; மனிதர் முதலான யாவருக்கும் போக்குவரத்து வியாபாரம் இல்லாமற்போகும்; ஆதலால், ஆகாசம் ஒன்று உள்ளது என்று அவசியம் கொள்ளவேண்டும். சத்த பரிச தன்மாத்திரையிலுண்டானது வாயு, இதற்கு சத்தம் பரிசம் ஆகிய இரண்டுகுணம் உண்டு. இனி ஆகாசம் ஒன்றுக்குமே சத்தகுணமுண்டு; மற்ற நாலு பூதங்களுக்குச் சத்தகுணமில்லையென்று வைசேடிகன் சொல்லில் அது கூடாது; சகசக தமதம சலசல கடகட என்பன முதலிய ஓசைகள் வாயு முதலான பூதங்களில் இருப்பதாகக் காணப்படுகையால், வாயு முதலானவற்றிலும் சத்தகுணமுண்டென்பது சித்தம். சத்த பரிச ரூப தன்மாத்திரையிலுண்டானது தேயு; இதற்குச் சத்த பரிச ரூபமென்னும் மூன்று குணம் உண்டு. சத்த பரிச ரூப ரச தன்மாத்திரையிலுண்டானது ஜலம் இதற்குச் சலசலவென்னும் சத்தகுணமும் சீதஸ்பரிசமும் சுக்கில ரூபமும் மதுரரசமும் உண்டு. கிணறு முதலானவற்றில் வேறு ரசம்தோன்றுவது ஆசிரயபேதத்தாலென்றறிக. சத்த பரிச ரூப ரச கந்த தன்மாத்

திரையிலுண்டானது பிருதிவி, இதில் கடகட என்னும் சத்தமும் உட்டிண சீதள பரிசமும் சுக்கில நீல பீத அரித ரத்த என்னும் பேதங்களுள்ள ரூபமும் மதுரம் லவணம் கைப்பு புளிப்பு காரம் என்னும் பேதங்களால் ரசமும், சுரபி அசுரபி யென்னும் பேதமுள்ள கந்தமும் இருக்கும். இப்படிப்பட்ட ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயமானது வெளியாதல் இடங்கொடுத்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். வாயுவானது சலித்தலும் பரந்தவற்றைத் திரட்டுதலும் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். தேயுவானது சுடுதல் ஒன்றுவித்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். அப்புவானது குளிர்தல் பதஞ்செய்தல் ஆகிய குணமும் தொழிலும் உடையதாம். பிருதிவியானது கடினமாதல் தரித்திடுதல் ஆகிய குணமும் தொழிலும்உடையதாம். இவைகளுள். அக்கினி; காருகபத்தியம் தக்ஷிணாக்கினியம்ஆகவநீயம் என மூன்றுவிதமாயிருக்கும்.சைவாக்கினியென்பது விந்துவினுதரத்தில் உண்டானது; இதற்கு வேறாகும். இந்த அக்கினி உலகத்தில் உயிர்கள் உண்ட அசனத்தைப் பாகஞ்செய்யுமாகையால் உள்ளாக்கினி பிராணிகளுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். இன்னும் நிலம், நீர், தீ, வளி, ஆகாசம் ஆகிய அப்பூதங்கள் முறையே நாற்கோணமும் இருகோணமும் முக்கோணமும் அறுகோணமும்வட்டமும் ஆகிய ஐவகை வடிவுகளும், பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை ஆகிய ஐவகை நிறங்களும், லகாரம் வகாரம் ரகாரம் யகாரம் ஹகாரம் ஆகிய ஐவகைப் பீசங்களும், வச்சிரம் தாமரை சுவத்திகம் அறுபுள்ளி அமுதவிந்து ஆகிய ஐவகை அடையாளங்களும், அயன் மால் உருத்திரன் மகேசன் சதாசிவன் ஆகிய ஐந்து அதிதெய்வங்களும் ஆகிய இவைகளை உடையனவாம். மேற்கூறிய முப்பத்தொரு தத்துவங்கள் உள்பட தத்துவங்கள் முப்பத்தாறாம்; இவற்றுள் முற்கூறிய சுத்ததத்துவம் ஐந்தும் சடமாயினும் சிற்சத்திக்கு சுதந்திர வடிவமாகலின் சைதன்னியமெனப்படும். ஏனை முப்பத்தொன்றனுள் புருட தத்துவம் ஒன்றும், சார்ந்ததின் வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும்; அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவேபடும் என்க. இத்தத்துவமுப்பத்தாறனுள் சுத்ததத்துவம் ஐந்தும் வித்தியாதத்துவம் ஏழும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் முறையே சுத்தம் மிச்சிரம் அசுத்தம் எனவும் பிரேரககாண்டம் போகசயித்திருகாண்டம் போக்கியகாண்டம் எனவும் காரணக்குறிபெற்று முத்தி[illegible]படும் என்க. பிரேரகம் - ஏவுதல் அதாவது ஒருமரப் பொம்மைக்கும் கயிறுகட்டி சூத்திரிகன் ஆட்டுமாறுபோல அசுத்த மாயாதத்துவங்களை சுத்ததத்துவங்களால் சிவனுடைய சிற்சத்தி சேட்டிப்பிக்கிறதினாலே பிரேரககாண்டமென்று பெயர். ஆன்மாவுக்குச் சகாயமாய் நின்று போகத்தை யுண்டாக்குகிறதினாலே போகசயித்திருகாண்டமென்று பெயர். புசிக்கப்படுவதாயிருப்பதால் போக்கியகாண்ட

மென்று பெயர். போக்கியம் - புசிக்கப்படும் வஸ்துக்கள். இனி, இத்தத்துவங்களுக்கு அதிதேவதைகளான பிருதிவிக்கு, பூதேவி. அப்புவுக்கு, வருணன். தேயுவுக்கு, அக்கினிபகவான். வாயுவுக்கு, வாயுபகவான். ஆகாயத்துக்கு, வியோமரூபியாயிருக்கின்ற ஈசுவரன். சுரோத்திரத்துக்கு திக்குரூபி. துவக்குக்கு, வாயு. சட்சுக்கு, சூரியன். சிஃவைக்கு, வருணன். கிராணத்துக்கு, அசுவினி தேவர்கள். வாக்குக்கு, அக்கினி. பாதத்துக்கு, இந்திரன். பாணிக்கு, உபேந்திரன். பாயுவுக்கு, மிருத்தியு. உபத்தத்துக்குப்பிர்மா. மனத்துக்கு, சந்திரன். அகங்காரத்துக்கு, பீமநாதன். புத்திக்கு, புத்திநாமசக்தி. தாமசகுணத்திற்கு, விட்டுணு. ராசதகுணத்திற்கு, பிர்மா. சாத்துவிக குணத்திற்கு, உருத்திரன். இராகதத்துவத்திற்கும் புருடதத்துவத்திற்கும், அராகபகவான். வித்தியாதத்துவத்திற்கு, வித்தியாதேவி. காலதத்துவத்திற்கு, காலேசுவரி. நியதிதத்துவத்திற்கு, காலருத்திரன். மாயாதத்துவத்திற்கு, மாயாதேவி. சுத்தவித்தியாதத்துவத்துக்கு, சுத்தவித்தியாதேவி. ஈசுவரதத்துவத்துக்கு, அனந்தேசுவரன். சாதாக்கியதத்துவத்துக்கு, சதாசிவன். விந்து நாதத்துக்கு சத்தியும் சத்தராகிய சிவனுமாம். அருவம் உருவம் அருவுருவம் ஆகிய காரியப்பிரபஞ்சம் அனைத்தும் இத்தத்துவ வடிவமேயாம். தூல சரீரம் உருவப்பிரபஞ்சம். சூக்குமசரீரம் அருவுருவப்பிரபஞ்சம். காரணசரீரம் அருவப்பிரபஞ்சம்.

(இன்னும் வரும்)

சுப்பிரமணியபிள்ளை.

மதுரை, திருஞானசம்மந்தசுவாமிகள் மடம்.

---

## புத்தகக் குறிப்பு.

தக்ஷிண இந்தியாவின் சரித்திர சாரசங்கிரகம்:—இப்பெயர் புனைந்த தமிழ்ப்புத்தகம் தென் இந்தியாவின் சரித்திரத்தைச் சுருக்கமாகக்கூறும். இது கோயம்புத்தூர் க்ரெஸென்ட் பத்திராதிபரும் நம் தமிழ்ச்சங்கத்து வித்துவத் அங்கத்தினரில் ஒருவருமாகிய சே. பகடால் நரசிம்மலு நாயுடு அவர்களாலியற்றப்பெற்றது. தமிழ் நாட்டு நண்பர்களில் ஒருவராகிய இவர் தமிழில் இலக்கண இலக்கியங் கற்ற அரிய வித்துவானல்லாவிடினும் தமிழருக்காகத் தமிழில் பல புத்தக

ங்கள் எழுதி வெளியிட்டுப் பேருபகாரஞ் செய்திருக்கின்றன ரென்பது யாவரும் அறிந்த விஷயம். எந்த மகாஜனசபையிலும் இவர் முன்வந்து எவருக்கும் ஊக்கம் பிறக்கும் வண்ணம் தெளிவாயும் இனிமையாயும் பேசுவார். பொதுஜன க்ஷேமத்தில் நெடுநாளாய் இவரைப்போல் உழைத்து வருபவர் நம் நாட்டில் சிலரென்றே கூறலாம். இவர்து விடாமுயற்சியும் லோகாநுபவமும், ஒழுக்கமும், தெய்வபக்தியும், கல்வியிலும் கல்விமான்களிடத்தும் இவருக்குள்ள அன்பும் எவரும் வியக்கற்பாலது. தேசசஞ்சாரம் செய்து இவர்பல அரிய விஷயங்களைக் கண்டும் கேட்டும் கருந்தனம்போல் போற்றி வைத்து இச்சமயம் நமக்களித்த பேருபகாரத்துக்கு நம் நாட்டார் இவருக்கு யாது கைம்மாறு செய்யப்போகிறூர்கள். ஆங்கிலத்திலுள்ள பல அரிய பெரிய நூல்களை ஆராய்ச்சி செய்து விஷயங்களைச் சுருக்கமாயும் அழகாயும் நம் தமிழ்நாட்டார் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் அன்னவர்பால் கருணை கூர்ந்து இத்தேசசரித்திரத்தைச்சிறிதும் விடாமல் எழுதியதற்குத் தமிழர் பெரிதும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டனர். சுமார் 500 பக்கங்கொண்ட இப்பிரபந்தம் இத்தென்னிந்தியாவிலுள்ள பூர்வீக இராசாக்கள், சிற்றரசர்கள், ஜமீந்தார்கள் முதலிய பல்லரசர்களுடைய பூர்வ சரித்திரங்களையும் தற்கால சரித்திரங்களையும் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது. நம் நாட்டுச் சரித்திரம் நம் தமிழிலில்லாக் குறைவை நம் நண்பர் ஒருவாறு நிவர்த்தி செய்துவிட்டனர். தமிழ்ச்சங்கப்புலவர் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற மட்டும் நம் தமிழிற்குண்டான குறைவை நம் நண்பரைப்போல் நிவர்த்தி செய்வார்களானல் நம் தமிழ் மிக்க சிறப்புற்ருேங்குமென்பதிற் றடையில்லை. இப்பிரபந்தத்தை நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனதிபதி ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களுக்குச் சமர்ப்பித்திருக்கிறது மிகவும் பொருத்தமே. அவர்களைப்போல் தமிழின் அருமை அறியத்தக்க பிரபுக்கள் எவருளர்? ஒவ்வொரு தமிழ் நாட்டபிமானியும் இதனை வாங்கிப்படித்தால் நலமாம். இதன் விலை குறிக்கப்படவில்லை. இந்நூலாசிரியர் நெடுநாள் வாழ்ந்து இன்றுபோல என்றும் நம் நாட்டுக்கு நன்மை புரிந்துவரும் வண்ணம் பகவான் கிருபை புரிவாராக.

சுதேசபரிபாலினி:—இப்பெயர் பூண்ட வாரப்பத்திரிகையொன்று ரங்கூனில் சென்ற மாதம் தொடங்கிப் பிரசுரமாகிறது. இது நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டிருப்பதுமன்றி விஷயங்களும் தெளிவான நடையில் அநேகமாய்ப் பிழையின்றி எழுதப்படுகின்றன. இது முக்கியமாய் வியாபார விஷயத்தையே பற்றிப் பேசுமாணுலும் விவசாயம், கைத்தொழில், இராஜாங்க விஷயம், முதலியவைகளையும் பேசும். தக்க தனவந்தர்களான நாட்டுக்கோட்டை நகரத்தார்களிதற்கு ஆதாரமாயிருப்பதாகத் தோற்றுவதால் இப்பத்திரிகை நன்கு நடந்து வருமென்பதிற்றடையில்லை. இரங்கூனுக்கு இம்மாதிரியான தமிழ்ப்பத்திரிகை இன்றியமையாததே. பர்மாவில் தமிழ்நாட்டு ஜனங்கள் 73,712 ஆண்களும், 25,864 பெண்களும் இருக்கிறூர்ககளென்றல் இவ்வளவு பேர்களுக்கும் தமிழ்ப்பத்திரிகை இல்லாமலிருக்கலாமா இப்பத்திரிகை தீர்க்காயுள் பெற்று என்றும் தேசத்துக்கு நன்மை செய்து வரும்படி எல்லாம் வல்ல கடவுள் கிருபை புரிவாராக.

பத்திராதிபர்.

---

## கிரோசின் விளக்கு நன்ருய் எரிவதற்குக் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்.

1. முப்பது நாளைக் கொருதரம் எண்ணெய் விட்டிருக்கும் அடிப்பாத்திரத்தையும் அதன் பித்தளை பர்னரையும் சோடா கலந்த ஜலத்தில் போட்டுச் சற்றுக் கொதிக்கவைத்துப் பிறகு அவைகளை எடுத்து நன்ருய்த் துடைத்து வெயிலில் காயவைக்கவேண்டியது தவிரவும் விளக்கை அடிக்கடி துடைக்க உபயோகப் படுப்படியான கந்தைத் துணியை ஜலத்தில் கொதிக்கவைத்து வெயிலில் காயவைக்க வேண்டும். அப்போது அதில் தங்கி இருக்கும் எண்ணெய்க் கசடெல்லாம் நீக்கிவிடும்.

2. இரண்டு மாதத்திற் கோர் முறை விளக்கின் வர்த்தியை வினிகர் (Vinegar) காடியில் நன்ருய் ஊறவைத்து வெயிலில் நன்ருய் உலர்த்திப் பிறகு பர்னரில் நுழைத்துப் போடவேண்டியது. மூன்று தினத்திற் கொருமுறை விளக்கு ஒழுங்காய் எரியும்பொருட்டு

சிலும்பில்லாமல் நன்றாய் வர்த்தியின் முனையைக் கத்திரிக்கவேண்டும். விளக்கை அவித்தவுடனே, வர்த்தியின் மறையைச் சுற்று முறுக்கி வர்த்தியை உள்ளுக்குத் தள்ளிவைக்க வேண்டியது. அவ்வண்ணம் செய்யாவிட்டால் எண்ணெயானது பர்னருக்குள் கசிந்துகொண்டிருக்கு மாதலால் விளக்கெரியும்போது சகிக்கக் கூடாதபடியான எண்ணெய் வாசனை வரும்.

3. விளக்கின் கண்ணாடி சிம்னியை வாங்கும்போதே ஒரு புது மட்பாண்டத்தில் குளிர்ந்த ஜலத்தை விட்டு அந்த ஜலத்தில் 4 நாளைக்கு ஊறவைத்துப் பிறகு அப்பாண்டத்தை அடுப்பின்மேல் வைத்து அதிலிருக்கும் ஜலம் கொதிக்க ஆரம்பிக்கும் வரையில் படிப்படியாய்ச் சூடேற்றி, ஜலம் கொதிக்க ஆரம்பித்தவுடனே இப் பாண்டத்தை இறக்கி அதுவே மெதுவாய்க் குளிரும்படி ஓரிடத்தில் வைத்து ஜலம் குளிர்ந்தவுடன் அதில் வைத்திருக்கும் சிம்னியைக் கொஞ்சம் அம்மோனியா (Ammonia) வை எடுத்துக் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தில் விட்டு இந்த அம்மோனியா கலந்த ஜலத்தில் அச்சிம்னியை எடுத்து நன்றாய்க் கழுவி ஓர் துவாலைத் துண்டால் நன்றாய்த் துடைத்து ஈரம் வறண்டபின் விளக்கின் பர்னரில் மாட்டி விளக்கைக் கொளுத்தும் பட்சத்தில் எவ்வளவு சூடானாலும் இச்சிம்னி வெடிக்காது.

4. விளக்குப் பிரகாசமாக எரியவேண்டுமானால், கிரோசின் எண்ணெயில் கொஞ்சம் சாதாரணமான உப்பையாவது அல்லது கற்பூரத்தையாவது பொடிசெய்து கிரோசின் எண்ணெயில் கலந்துவிடவேண்டியது. இவ்விதம் செய்யில் எப்பேர்ப்பட்ட கீழ்த் தரமான எண்ணெயை உபயோகித்த போதிலும் துர்க்கந்தமான நாற்றமற்று அதிக பிரகாசமான ஒளியைத் தரும்.

இந்து அபிமானி.

---

## விஷபேதி காலத்தில் அனுசரிக்கவேண்டிய முறைகள்.

1. காலராப்புழுமனுஷதேகத்தின் வெளிப்புறத்திலேயே வசிக்கிறது. மறுபடியும் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறது.

2. குடிக்கும்ஜலம், வெளுக்கும்ஜலம் பால்கலந்தஜலம், ஆகிய இவைகள் சந்தேகிக்கப்படும்.

3. காலராப் புழுவை, கார்பாலிக்பவுடர் முதலான டிஸ் இன் பெக்டென்டிஞலும், அதிக நேரம் சூரிய உஷ்ணத்திஞல் பிரயோகித்து வைப்பதிஞலும், அதிக சுலபமாய்க் கொல்லலாம்.

4. அப்புழு, தண்ணீர் காய்ச்சுவதிஞல், அதி சீக்கிரமாயும், சுலபமாயும் செத்துப்போய்விடும்.

5. காய்ச்சின தண்ணீர் மிகவும் மேலானது.

6. இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் நன்ருய்க் காய்ச்சிஞல் போதுமானது.

7. எப்பாத்திரமாவது, சாப்பிடும் பதார்த்தமாவது, குடிக்கும் ஜலமாவது, காலரா கண்ட மனிதனின் வாந்தியாவது மலமாவது தொற்றிக் கொண்டால் தான் வேருெரு மனிதனுக்குக் காலரா தொற்று வியாதியாய் வரும்.

8. கூடிய மட்டும், காலரா இருக்கும் வீட்டில், சாப்பிடுவதை யாவது, ஜலம் குடிப்பதையாவது விலக்கவேண்டும்.

9. நாம் அவ்வியாதியை விழுங்க முடியும். நாம் அவ்வியாதியை உள் மூச்சிஞலும, காலராவில் இருக்கும் மனுஷரையாவது பார்த்த மாத்திரத்திஞலும் அவ்வியாதி நமக்கு வர முடியாது.

10. நாம் காலரா மனிதனைத் தொட்டால் நாம் சாப்பிடுவதற்கு அல்லது ஜலம் குடிப்பதற்கு முன் கைகளை நன்ருய்ச் சுத்தி செய்து கொள்ளவேண்டும்.

11. காலராப் புழுவை ஆஸிட்டு களிஞலும், கார்பானிக் ஆஸிட் க்ளிஞலும் சுலபமாய்க் கொல்லலாம். ஆகையால் இக்காலங்களில் சோடாவாடர் அதிகமாய்க் குடிப்பது மிகவும் நலம்.

12. பழைய சாப்பாட்டையும், கிணற்று ஜலத்தையும் நீக்கிவிட வேண்டும்.

13. எச் சாப்பாடும் அப்பொழுது தான் சமைத்துச் சாப்பிட வேண்டும்.

14. இவ்வியாதி தொலையும் வரை வீட்டை விட்டு வெளியே போய்ப் புசியாமல் இருப்பதற்குப் பிரயத்தனப்படவேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட 14 விதிகளும் ஹெல்த் ஆபீஸரால் சொல்லப்பட்டவை. யாவரும் அனுசரிக்கவேண்டியது.

சுதேசி.

உ

வேலுமயிலுந்துணே.

# பொட்டணம்.

வெள்ளே நொச்சியிலே, காட்டு முருங்கைப் பட்டை, இதின் மலர், சீந்தி விலே, ஓமம், நவச்சாரம், கருஞ் சீரகம், வேப்பங்கொட்டைப் பருப்பு, எருக்கின் பழுப்பு, மாவிலிங்கம் பட்டை, வெள்ளுள்ளி, தேற்றுங்கொட்டை, வசம்பு, இவைகளே ஓரளவாயெடுத்து நிறுத்து ஒரு துணியில் பொட்டணமாய்க் கட்டி, ஒரு கரண்டியில் வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சி யிறக்கி அந்தச் சூடாயிருக்கும் எண்ணெயில் மேற்படி பொட்டணத்தை நனேத்து வெதும்பி இருக்கும் போதே ஒத்திட வேண்டியது. எண்ணெய் குளிர்ந்து விடாதபடி வெதுப்பிக் கொள்ளவும்.

தலேப்பாரம், பிடரிவலி, இசிவு, தேகத்தின் பலவிடங்களிலுங் காணும் விருவிருப்பு, சீதமிகுதியால் ஸ்மரணேயின்மை, விஷபேதியில் காணும் அதிசீதளம், கெண்டை புறட்டல், வலிப்பு, சன்னி, இவைகளுக்கு இந்த வேது நல்ல குணத்தைச் செய்யும். வேது கொடுத்தவுடன் பொட்டணத்தை யெறிந்து விடாது பத்திரப் படுத்தவேணடியது. ஆறு எழு நாள் நோயாளிகளுக்கு இந்த ஒரு பொட்டணமே உபயோகிக்கலாம். ஒரு வருஷம் வரையுங் குணஞ் செய்யும்.

## சர்வசுர கஷாயம்.

தாமரைக் கிழங்கு, முத்தக்காசு, நன்னறிவேர், கிராம்பு, கோஷ்டம், எலரிசி, தாளிசபத்திரி, நாவற்பூ, லவங்கப்பத்திரி, கோரோசனே, விஷ்ணுகாந்தி, அதிமதுரம் தென்னம்வேர் வில்வபழத்தின்ஒடு இவைகளில் கோரோசனே யொழிந்த மற்றைச் சரக்குகள் வகைக்குப் பலம் 1. கோரோசனே வராகனெடை 1. எல்லாவற்றையும் 8 படி தண்ணீரிவிட்டு 1 படியாய்க்குறுக்கிக்கொண்டு வேளேக்கு அரைக்காற் படிவீதம் 3-நாள் 6-வேளே யுட்கொள்ள எவ்வகைப்பட்ட சுரங்களுந் தணியும். தாகம் வாந்தி, அருசி இவைகளும் நீங்கி ஆரோக்கிய முண்டாகும்.

பத்தியம் :—புளி, மோர், நீக்கி இச்சா பத்திய மாயிருக்கவேண்டியது.

சுரந் தணிந்தபின் 3நாள் பார்த்து 4ம் நாளில் தான் ஓமத் தணணீர் ஸ்நானம் பண்ணவேண்டும். இந்த ஸ்நானத்தின் பிறகு தான் புளிமோர் நெய் முதலிய சேர்க்கவும். உடம்பில் நெடு நாட்பற்றிய கடுஞ் சுரங்களுக்குமாத்திரம் பத்தியமுங் கடினமாய்க் காக்கப்படவேண்டும். நவீன சுரங்களுக்குப் பத்தியம் அவ்வளவு தேவையில்லே.

## கதலி ரசாயனம்,

ஒரு புதிய மட்பாண்டமொன்றில் ஒருபடி பசுவி னெய்யை யூற்றி, 100-கதலிப் பழத்தைத் தோல் நரம்பு நீக்கிப் போதுமான பசுப்பாலி விட்டுப் பிசைந்து துணியில் வடித்த ரசம் படி 2. இதையும் 10 பலம் வங்காளச்சீனியும் முன்னைய நெய்யில் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயிட்டெரித்து மெழுகு பதமானபோது வெள்ளைப் பறங்கிப் பட்டை பலம் 6. இதை ஒரு படி பசுப் பாலில்வேகவைத்துக் கழுவி யுலர்த்திக்கொள்ளவும். கோஷ்டம் பலம் 4. திப்பிலி பலம் 2. சுக்கு பலம் 2. சாதிக்காய் பலம் 2. கிராம்பு பலம் 2சீரகம் பலம் 2. இவ்வேழுசரக்குக்களையும் இளவறுப்பாய் வறுத்தும், மிளகரணைவேர்சங்கம் வேர் வகைக்குப் பலம் 2. இவ்விரண்டையும் வறுக்காதும் ஒன்று சேர்த்திடித்து வஸ்திரகாயம் பண்ணிய சூரணத்தைச் சிறுகச்சிறுகத் தூவிக் கிளறி யிறக்கி தேன் படி $\frac{1}{4}$ விட்டு மத்தித்துக் கணபதி, முருகர். வடுகநாதர், இம்மூவரையும் பூசித்து ஒரு வாரம் நெற்புடத்தி விட்டெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

உட்கொள்ளும் விதம்:வேளைக்குக் கொட்டைப் பாக்களவாகத் தைலஸ்நான நீங்கிய மற்றை நாட்களில் காலை மாலை யிருவேளையும் வியாதிக்குத் தக்கபடி - 12 - 24 - 36 - 48 - நாட்கள் வரை சாப்பிட்டு வருக.

**தீரும்நோய்கள் :—** பெரும்பாடு, எலும்புருக்கி, பிரமேகம், அரையாப்பு, கிரந்தி, அஸ்திசுரம் அஸ்திவெட்டை, உஷ்ணம், எரிவு, காந்தல், சிரங்கு, சொறி, கரப்பன், ஊறல், கிராணி, மூலச்சூடு, இளைப்பு, இருமல், காசம், நீரழிவு, கிரிச்சரம், சூசிகாவாயு, எழுவகைக் கெர்ப்பக்கேடு, இவை முதலிய எண்ணில்லாத பயங்கர ரோகங்கள் குணமாகும்.

ஆனால் ரோக ஆரம்பத்தில் இதைச் சாப்பிட்டவர்கள் தான் பயனடைவார்கள். முற்றியரோகமுடையார் இந்தரசாயனத்தில் வேளைக்கு ஒருபணவெடைவீதம் ரசபஸ்பமாவது வங்கபஸ்மமாவது கூட்டிச் சாப்பிடவேண்டும். இளைப்பிருமல் காசமுதலிய கப ரோகிகள் வங்கபஸ்மத்தையும் இதர மேக ரோகிகள் ரசபஸ்மத்தையுஞ் சாப்பிட்டுவரல் வேண்டும்.

**கவனிப்பு :—** ரசபஸ்மத்தைச் சேர்த்துச் சாப்பிடுவதாயின் - 7 - நாளும் பாலுஞ் சாதமுமன்றி வேறெந்த உணவையும் புசிக்கலாகாது. 8-ம் நாள்தொடங்கி ரசாயனத்தை மாற்றிக் கொஞ்சநாள் சாப்பிட்டுவர வேண்டியது. வங்கபஸ்மத்திற்கு இந்த நியதிகிடையாது. இச்சாபத்தியமாயிருந்து புசிக்கலாம் - அபத்தியமும் மாதர் முயக்கமுங் கூடாது. மருந்து எத்தனை நாள் எடுத்துக் கொள்ளப்பட்டதோ மறுபடியும் அத்தனை நாள் பத்தியங் காத்தலே சிலாக்கியம்.

வி. சா. ஐயன்பிள்ளை.

## விண்ணப்பம்.

அன்பார்ந்த நேயர்காள் இப்பாநுவாயிலாக யான் எழுதிவரும் எல்லா மருந்துகளும் எப்போதும் என்னிடம் தயாராயிராது. இன்ன நம்பருள்ள பேபரில் குறித்திருக்கும் மருந்தை-வி - பி - போஸ்டிலனுப்புக என்றெழுதினல் யான் முடித்துத் தானனுப்பவேண்டும். வைத்திய அனுபோகமில்லாதாரும் அவரவரே முடித்துக்கொள்ளுதற் கேற்ற இலகுவான பிரயோகங்களையே எழுதிவருகின்றேன். என்மூலமாகவே வேண்டுமென்றிருந்தால் வியாதியின் மாதிரியை விவரமாயெழுதியனுப்பினல் அதற் கேற்ற மருந்துகளையனுப்பிச் சொஸ்தப்படுத்தலாகும். நீங்கள் கேட்ட மருந்து ஆசாிருப்பின் அதனையனுப்பவுங்கூடும். கடித மெழுதுவோர் என்னால் இடமாற்றந் தெரிவித்துக் கொள்ளும் வரையும் அடியிற் கண்ட விலாசமிட்டே எழுதக் கேட்கிறேன்.

இங்ஙனம்,
வீ. சா. ஐயன் பிள்ளை,
இந்து வைத்தியர்,
பல்லடம்.

---

## சமாசாரக்கொத்து.

டாக்டர் மில்லர் துரையவர்கள் அடுத்த அக்டோபர் மாதம் சென்னைக்குத் திரும்பி வருவார். அவருக்குத்தேகம் சௌக்கியமே.

*　*　*

பல்லாரியில் பிளேக்கு அதிகமாக இருந்துவருவதைக் குறித்து மிகவும் துக்கிக்கின்றோம்.

*　*　*

பங்களூரில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

*　*　*

தஞ்சாவூர் ஜில்லா போர்டார் நெசவு தொழில் கற்பிக்கும் பாடசாலை யொன்றை ஐயம்பேட்டையில் ஸ்தாபிக்கப்போகிறார்கள்.

*　*　*

அமெரிக்காவிலுள்ள வாஷிங்க்டன் என்னும் நகரத்தில் மிஸ்டர் வின்ஸ்லோ என்பவர் பறக்கும் யந்திரம் ஒன்று கண்டுபிடித்திருக்கின்றனராம்.

இராமேசுவரத்துக்கு இருப்புப்பாதை போடமட்டும் இந்தியா செக்ரடரி அனுமதி கொடுத்திருக்கிறாராம்.

* * *

ராஜபுதனம், பஞ்சாப், ஐக்கியமாகாணங்களில் பஞ்சக்குறிகள் பலமாய்த்தோன்றியிருக்கின்றன என்பதை அறிந்து விசனிக்கின்றோம்.

* * *

நம் புதுகவர்னர் ஜெனரலாகிய லார்ட் மின்டோ அடுத்த அக்டோபர் மாதக்கடைசியில் வருகிறாரென்று தெரிகிறது.

* * *

வங்காளமாகாணத்தில் ரஞ்சியில் காலேஜ் கட்டுவதற்காக இதுவரை மூன்றுலக்ஷம்ரூபா சேர்ந்திருக்கிறது.

* * *

நம் லார்ட் ஆண்டில் அடுத்தவருஷம் பிப்பரவரிமாதம் இங்கிலாண்டுக்குத்திரும்பிப்போவார்.

* * *

உலகத்தில் 10 லக்ஷம் பேர்களில் 60 பேர் குருடர்களாயிருக்கிறார்களாம்.

* * *

உலகத்திலுள்ள பத்திரிகைகளில் 100க்கு 68 இங்கிலீஷபாஷையில் பதிப்பிக்கப்படுகின்றன.

* * *

உலகம் முழுவதிலும் வருஷந்தோறும் செலவாகும் மிளகின் விலை 7,50,500 பவுன்களாகின்றவாம்.

* * *

விஜயநகரம் ஜமீன்தாரிக்கு நால்வர் வார்சுதாரர் என முன்வந்து ஜில்லா கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்திருக்கிறார்களாம். ஜமீன்தாரிக்குக் கேடும் வக்கில்களுக்கும் ஸ்டாம்புஇலாகாவுக்கும் கொண்டாட்டமுமே.

* * *

நியூயார்க் பட்டணத்தில் 130-வயதுள்ள ஒருவர் சரீர சௌக்கியத்துடனிருந்து வருகின்றனராம். சமீபத்தில் அவர் பிறந்த நாள் கொண்டாடினராம். சதாபிஷேகம் இவருக்கு இருமுறை நடக்கும்போலும்.

* * *

ஜப்பான தேசத்தார் 1904-ம்ஹு-முதல் இதுவரை 4 முறை லண்டன் சாவுகாரரிடம் கடன் வாங்கியிருப்பதாகவும் அதன் மொத்தத்தொகை 123 கோடி ரூபா ஆகிறதென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பூனாவிலுள்ள மாணவர்கள் மிஸ்டர் பாலகங்காதரதிலகரின் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிப் பிரிட்டிஷ் சரக்குக்களை வாங்கக்கூடாதெனத் தீர்மானஞ் செய்திருக்கின்றார்கள்.

* * *

மாக்கோ என்றஇடத்தில் சுமார் ஒன்பதுமணிநேரம் பூமியதிர்ச்சியுண்டாயிற்று. ஜனங்கள் மிகவும்நடுங்கிப்போனார்கள். அநேகர் ஹாங்காங் நோக்கிச் சென்றுவிட்டார்கள்.

* * *

சியம்தேசத்தில் பணக்காரமாதர்கள் தங்கள் தலைமயிர் நேராக இருக்கவேண்டுமென்று நினைத்து $1\frac{1}{2}$ அங்குலம் நீளம்விட்டு மீதியைக்கத்தரித்துவிடுகிறார்கள். இதுவும் ஒருபுதுமையே.

* * *

அடுத்த டிசம்பரில் காசி க்ஷேத்திரத்தில் நடக்கப்போகும் காங்கிரெஸ் மகா சபைக்கு ஆனரபில் மிஸ்டர் **கோபால் கிருஷ்ண கோக்லே** பிரசிடெண்டா யிருக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

* * *

வங்காளத்தில் **பங்கபாசி** பத்திராதிபர் காலஞ்சென்றதைக்கேட்டுத் துக்கிக்கின்றோம். இப்பத்திரிகை வங்காளநாட்டில் மிகப்பரவி பொதுஜனநன்மையில் உழைத்து வருகிறது.

* * *

ருஷிய ஜப்பானிய யுத்தம் முடிவுபெற்றது. சமாதான உடன்படிக்கை முடிவாகிவிட்டது. ஜப்பானியர் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டதாக அறிந்து களிப்புற்றோம். அடுத்தமுறை உடன்படிக்கை நிபந்தனைகளைப்பற்றி விவரமாய் எழுதுவோம்.

* * *

ராண்சன்ரேஸால் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தலாமென்றும், இருபத்தைந்து குஷ்டரோகங்கள் குணப்பட்டிருக்கின்றனவென்றும் அவர்களில் ஆறுபேர்களுக்கு அநேகமாய்ப் பூரணசௌக்கியமுண்டாயிருக்கிறதென்றும் அமெரிக்கா வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

* * *

நாகபட்டணம்நாஷனல்ஹைஸ்கூலை வித்தியாஇலாகாதார் அங்கீகாரம் செய்ததாகக்கேள்வியுற்று மிககமகிழ்ச்சியடைகின்றோம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." என்னும்பழமொழி இந்நகர்வாசிகளிடத்தில் உண்மையாயிற்று.

வேலூர் நகரத்துக்குக் குழாய்த்தண்ணீர் ஏற்பாடு செய்யும்பொருட்டுக் கவரன்மெண்டார் 4 லக்ஷம் ரூபா சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இதில் 2 லக்ஷம் கவரன்மெண்டார் முனிசிபாலிட்டிக்கு இனாமாகவும் பாக்கி 2 லக்ஷம் 100-க்கு 4-வீதம் வட்டிக்குக் கொடுப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்கள் என்று அறிந்து ஆநந்தமடைகிறோம்.

* * *

வங்காளமாகாணப் பிரிவினையையங்கீகரித்து மிஸ்டர் பவுனகிரி பார்லிமெண்ட்சபையில் பேசியபடியால் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று கல்கத்தாவில் மிஸ்டர் பவுனகிரிமாதிரி உருவம் செய்து அவ்வுருவம் தீக்கொளுத்தப்பட்டது. பிரிட்டிஷ் சிகரெட்டுக்களைவாங்கக்கூடாதென்று வங்காளிகள் தீர்மானித்திருக்கிறார்கள். சுதேசி.

* * *

உலகத்திலுள்ள எரிமலைகள் எல்லாவற்றிலும் ஈக்குவேடாரிலுள்ள **சாங்கே** என்ற எரிமலையே மிகவும் பயங்கரமானதாம். அதன் உயரம் 17,120 அடி: அது 1828-ம் வருஷத்திலிருந்து நெருப்பைக் கக்கிக்கொண்டேயிருக்கிறதாம். சில சமயத்தில் 150 மைல் தூரத்துக்கு அது வெடிக்கும் சத்தம் கேட்கின்றதாம்.

* * *

திருநெல்வேலி சப்ஜட்ஜாயிருந்த மகா-ள-ள-ஸ்ரீ டி. சதாசிவ அய்யரவர்கள் திருவனந்தபுரம் ஹைகோர்டு சீப் ஜஸ்டிஸாக நியமனமாகி வேலை ஒப்புக்கொண்டுவிட்டார் இவரது சுகுணத்தையும் பொறுமையையும், புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் பக்தியையும் புகழ்ந்து பேசாதவர்களில்லை. பகவான் இப்புண்ணிய புருஷருக்கு நீடித்த ஆயுளையும் தேக சுகத்தையும் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கிறோம்.

* * *

மிடையர் ஹாரிஸ் என்னும் கணித சாஸ்திர நிபுணர் ஒருவர் மைசூர் பிராந்தியத்தில் நாலடி அகலம் ஒருமைல் நீளமுள்ள ஒரு கற்பாறைக் கண்டுபிடித்தனராம். அதைச்சுற்றிக் கல் நார் உற்பத்தி செய்யக்கூடிய வெண்மை நிறமான மண்ணும இருக்கின்றதாம். அவர் இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பி நவம்பர்மாதம் மைசூருக்குவந்து கல்நார் எடுக்கும் வேலையை ஆரம்பிக்கப் போகின்றனராம்.

* * *

**ஆயிர ரூபா இனும்:**—கன்னிப்பருவம் அழியாத விதந்துஸ்திரீகளுக்கு மறுமணஞ் செய்யக்கூடாதென்று இந்துசாஸ்திரங்கள் சொல்வதாகயாராவ

து நிரூபிக்கக்கூடுமானல் அவர்களுக்கு ஆயிரரூபா இனும்அளிப்பதாக "அப்லாஹிதரா"ப் பத்திரிகையின் அதிபர் மிஸ்டர் பாபுசங்காலால் என்பவர் விளம்பரம் செய்திருக்கிறார். சாஸ்திர ஆதாரங்களைக் காட்ட வல்லவர் காட்டலாம்.

* * *

ஆனரபில் மிஸ்டர் ஜி. ஸ்ரீநிவாசராயர் அவர்கள் மதுரை முனிசிபல் சேர்மனாக நியமிக்கப்பட்டதைக் கவரன்மெண்டார் அங்கீகரித்துவிட்டார்கள். இவ்விஷயம் எவருக்கும் மகிழ்ச்சிதரத்தக்கதே. இராயர் அவர்கள் மிக்கஊக்கத்துடன் உழைத்து மதுரை சுகாதாரவிஷயங்களை அபிவிருத்தி செய்வார்களென்று நம்புகிறோம் இதனால் இராயர் அவர்களுடைய பேரும் புகழும் அதிகரிக்கும். கௌன்சிலர்களும் இவர்களுடன் ஒத்து உழைத்து அவர்களுக்கு ஆலம்வீழ்துபோல் உதவியாயிருப்பார்களாக.

* * *

நாள் ஒன்றுக்கு ரூ 2400 பெறுமான நெருப்புப்பெட்டிகள் பர்மாவில் மட்டும் செலவாகிறதென்றால் இந்தியாவில் எத்தனை லக்ஷக்கணக்காய்ச் செலவாகும் என்பதிற்றடையில்லை. இந்தியாவில் இரண்டு மூன்று இடங்களில் மட்டும் இத்தொழில் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் பலவிடங்களில் இம்முயற்சி நடைபெறுமானல் நலமாகும். நீரைப்போல் நெருப்புமின்றியமையாததால் அனைவரும் இதை வாங்கித் தீரவேண்டியிருக்கிறது. இத்தொழில் முயற்சி செய்ய நம் தனிகர்கள் முன்னுக்கு வருவார்களாக.

* *

சென்னையில் சென்ற ஒரு மாதகாலமாய் வாந்திபேதி மும்மரமாக உலாவிவருகின்றது. குடிக்க நல்லதண்ணீர் கிடைக்கிறதில்லை சொற்பஜலமும் எவரும் அருவருக்கத்தக்க நிலையிலிருக்கிறதாம். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டமாதிரி குழாய்த்தண்ணீரை நம்பிக் கிணறுகளை மூடிவிட்டது மிகவும் சங்கடமாயிற்று. வருணபகவான் பலமாய்க் கிருபை பண்ணினாலொழிய வேறு கதியில்லை யென்று கேள்விப்பட்டு மிகவும் விசனிக்கிறோம். கோடிக்கணக்கான ஜனங்கள் என்னமாய்த் தவிப்பார்களோ! சர்வேசுவரனே கிருபை புரிவாராக.

* * *

பரோடா மகாராஜா கபுர்த்தலா மகாராஜா முதலிய 9 இந்திய அரசர்கள் இப்போது இங்கிலாந்திலிருக்கின்றார்கள். இவர்கள் 9 பேருமாகக்கூடி இந்தியாவில் தொழில் விருத்திசெய்யும்பொருட்டு ஒரு பெரு முயற்சி நடத்தப்போகிறார்களென்று தக்கவர் மூலமாய்த் தெரிந்திருப்பதாக "மார்னிங் லீடர்" சொல்லுகின்றது. அந்த முயற்சிக்கு 75 லக்ஷம் ரூபா மொத்தம்

செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் பாதித்தொகைக்கு மேற்கூறிய இந்திய அரசர்கள் தாமே கொடுப்பதாகச் சம்மதம் கொண்டிருக்கிறார்களாம்.

* * *

திரிசிரபுரத்தைச்சார்ந்த தென்னூரில் பென்ஷன் டிப்டிகலெக்டராயிருந்த ராவுபகதூர் டி. பட்டாபிராமபிள்ளை யவர்கள் வைகுண்டப்பிராப்தியடைந்தனர். இவர் ஜனரஞ்சிதர், பரோபகாரி, எந்தவேலையில் தலைப்பட்டாலும் உற்சாகத்துடன் உழைத்துவந்தவர். பென்ஷன் வாங்கினபிறகு இருந்தவிடம்தெரியாமல் காலங்கழிக்கும்பலரைப்போலன்றிஇவர் பொதுஜனநன்மைக்கு உழைத்துவந்தனர். ஹிந்துமதப்பற்றுள்ளவர். இவர்காலஞ்சென்றதைப்பற்றி இவரை அறிந்த பலரும் துக்கியாமலிரார்கள். நம் நாட்டுப்பரிசுத்த உத்தியோகஸ்தரிலிவர் ஒருவர்.

* * *

விஜயநகரத்தில் கலப்பைகளும் கிருஷிசாமான்களும் செய்துவிற்பதற்காக ஒருதொழிற்சாலை யேற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக்கேட்டுச் சந்தோஷிக்கின்றோம். ஜில்லா ஜில்லாவாக இம்மாதிரி ஏற்பாடு இருந்தால் உழுதுண்டுவாழ்பவருக்கு மிக்க அனுகூலமாக இருக்கும். குடியானவர்களுடைய குறையைத்தீர்க்கஏற்படும் எந்தமுயற்சியும் நம்தேசத்துக்கு அநுகூலமே. அப்பொழுதுதான் நம்குடிகள் க்ஷேமமடைய இடமுண்டு. ஐக்கியசங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நன்றாய்நடந்துவந்தால் இவைகளெல்லாம் மிகவும் சுலபமாய் நடக்கும்.

* * *

கல்கத்தாவில் "உதய" சபை என்ற ஒரு சபை சென்ற நான்கு வருஷங்களாக இருநது வருகின்றது. இஃதோர் சிறந்த சபை. வங்காளத்து இளைஞர்களுச்குப் பலவிதக் கல்வியளிக்கவேண்டுமென்பதே இச்சங்கத்தின் முக்கியநோக்கம். இது நான்கு வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது அவை (1) சன்மார்க்க வகுப்பு (2) பொதுவகுப்பு (3) பாஷாவிருத்தி வகுப்பு (4) தொழில் விருத்தி வகுப்பு இச்சபையால் நம்நாட்டுக்கு மிக்கநன்மை உண்டு என்பதிற் சிறிதுமையமில்லை. பெரிய பிரபுக்களெல்லாம் இதில் ஊக்கத்துடன் உழைத்து வருகிறார்கள். இந்தியாவின் ஒவ்வொருமாகாணத்திலும் இம்மாதிரி சபைகள் ஏற்பட்டு உழைத்துவந்தால் நாடெங்கும்நன்மையுண்டாகும்.

* * *